ஓ. எம். ...

தென்றல்

விலை 16 புதியகாசுகள்

ஆசிரியர் ...ண்ணதாசன்

ஆனந்

...ள்நாடு (இலங்கை ...) விலை 16 புதிய காசு | வெளிநாடு 20 காசு | அலுவலகம்: 'தென்றல்' சென்னை-6

...லர் 5 | சென்னை | 26-7-58 | சனிக்கிழமை | இதழ் 6

ஓ. எம். சுப்பிரமணியன், பொத்தனூர் (சேலம் மாவட்டம்)

AGENT MANI & Co. SHEVAPET.

தமிழுக்கு இழுக்கு!

...லக மொழிகள் அனைத்தி... பிறமொழிக் கலப்பு இல்... ல் இல்லை என்பர் அறி... வ்வாறு கொண்டால் எல்... மொழிகளும் கலப்புடை... ன்றே கொள்ளுதல் வே... ம். தமிழ்மொழியிலும் ...மொழிக் கலப்பு உண்டு ... தை மறுப்பதற்கில்லை. ஆ... வ்வாறு இருப்பது தமிழ்மொ... ன் வளர்ச்சித் துறை... ன் தருமா? ஆங்கிலம், இ... ர்சியன், போர்ச்சுகல் பே... மொழியின் சொற்க... மிழில் இன்று காண்கின்... இவை தமிழ்ச் சொற்... கூடிலும் மிக, மிகக் கு... கும். தொல்காப்பி... ற்சொல், திரிசொல், ... வடசொல்'' ... களை நான்கே வந்... துகின்றார். இயற் ... திரி சொல்லும் ... க்கத் தனித் தமிழ்ச் ...யாகும். திசைச் ...கயுள் பல திசைச் ...யும், வட நாட்டு வழி... மொழிச் சொற்கள் ...றவானமையால் இற... சகிக் கூறினார். என... ல் பிறமொழிச் சொற்... ன்மையே வழங்கிற்... போதரும். இடைக் ... நான் சமய மறுமலர்ச்... போதே வடசொற்கள் ... வந்து வழங்கலுற்றது ... இதனால் என்ன நன்... பதைக் காணலாம்.

...ங்கிலம் தமிழுட... ...ல் "நோய்'' எ... ...மபாலும் இழ... "சிக்கு'' (Sick) என்றும்; ... மொழி இணைந்தமை... "வியாதி'' ஆகியுள்ளது. இ... னும் இந்தி மொழியும் இணை... தால் 'பீனிசம்'' என்று ... பெற்றுவிடலாம். பின் '... என்ற சொல்லே அறியக்கூ... போய்விடலாம். இதில் ... பொன்றும் இல்லை. பிறமொ... ஒன்றனால் தவறுகள் ஏற்படு... குறைவாக இருக்கலாம். ஆ... பல மொழிகள் புகுந்தமை... தமிழ் மொழிச் சொற்கள் இ... வழக்கில் வழுவி உள்ளன.

அப்படியானால் தமிழில் பிற மொழிக் கலப்பே கூடாதா? என்றால் அவ்வாறு கூறுதலை மொழிநூல் முறையாகக் கற்றோர் ஒப்புவதில்லை. ஒரு குறிப்பிட்ட மொழி சிற்சில குறிப்பிட்ட வேளையில் பிறமொழிக் கலப்பை வெறுத்தற்கு இயலாது. காரணம்: நான்கு வகைப்படும்.

1. சமுதாயம் குறித்து வழங்குவன; 2. அரசியல் குறித்து வழங்குவன; 3. வாணிபம் குறித்து வழங்குவன; 4. பொருளியல் குறித்து வழங்குவன.

தமிழில் சமுதாயம் குறித்து வழங்கும் பிறமொழிச் சொற்கள் ஆஸ்பத்திரி; விதவா விவாஹம்; போன்றன. அரசியல் குறித்து-

...மெண்ட்'' "சாம்பர்'' அசெம்... ...வர்ன்மெண்ட்' போன்ற... ...ள் தமிழில் காண்பவை. ...ம் குறித்துத் தமிழில் ...ம் பிறமொழிச் சொற்கள் ...கிராம்', 'பவுண்டு' ...ல்' போன்றன பொருள்...

கள் மனதில் பதிந்த பின்னரே வழக்கிற்குக் கொண்டு வந்தால் நலம். எனவே ஒரு மொழி குறிப்பிட்ட சூழ்நிலையில் கடன் வாங்குதல் தவறு அல்ல; ஆனால் கடன் வாங்குதலே,-பிறமொழிச் சொற்களை எடுத்தாளுதலே கருத்தாகுமானால் தமிழ்மொழி தன் தனித்தன்மையை வெகு விரைவில் இழந்துவிடும் என்பதுமட்டும் உறுதி.

மதியும் நிதியும் தன் பக்கம் படைத்த அறிஞர் ஒருவர் ஒரு திங்கட்குமுன் சொற்பொழிவு ஒன்றில் "ஆங்கிலம்போல் தமிழும் பிறமொழிச் சொற்களைக் கூசாமல் கடன் வாங்குமானால், ஆங்கிலம்போல் உலகில் தமிழ் சிறப்புறும்'' என்ற கருத்... யக் கூ... மொ... '...

பின்னே அமைந்து கிடக்கும் அரசியல் சூழ்ச்சியை அறியாதிருத்தல் தகுதியன்று. ஆங்கிலம் பேசப்படாத நாடு அறிவில் குறைந்த காடு என்றுள்ள நிலை இன்று காண்பது. எவ்வாறு ஆங்கிலம் உலக மொழி ஆயிற்று?

பல்வேறுபட்ட மொழிச் சொற்களைத் தன் விருப்பம்போல் ஆங்கிலத்தில் எடுத்து ஆண்ட காரணம்பற்றியே உலக மொழியாக உயர்ந்தது எனலாமா? லத்தீன், ஐரிஷ், பிரிட்டானி என்ற ஒரே குடும்ப மொழிகளில் பிரிட்டானி என்றழைக்கப்படும் மொழிதான் இன்று ஆங்கிலமாக வழங்குகிறது. இந்த புராதன 'பிரிட்டானி' என்ற மொழி இன்று எலும்புக்கூடாக, சதையற்ற கூடாக தன்னுடைய மொழிக் கூறுகளை முற்றிலும் இழக்கப் பெற்று 'ஆங்கிலம்' என்ற அவல நிலையை அடைந்துள்ளது. ஆங்கிலம் பல்வேறுபட்ட மொழிச் சொற்களை 'லத்தீன்' 'பிரெஞ்ச்' ஸ்பானிஷ்' போன்ற பல்வேறுபட்ட மொழிகளை எடுத்துத் தனக்கேற்பக் கையாண்டமையின் விளைவே 'பிரிட்டானி' என்ற புராதன மொழி எலும்புக் கூடானது.

என்றாலும் ஆங்கிலம் பிற மொழிச் சொற்களைக் கலந்து வழங்கியதால் இன்று உலக ... என்பார் கூற்...

தசரதன் பிள்ளையில்லாத நிலையில் இருக்கும்போது, இந்திரனை நோக்கி யாகம் செய்தால் எண்ணம் ஈடே மென ஒரு முனிவர் கூற, அதற்கு ஆயத்தம் செய்தான். ரிஷ்யசி ங்கரென்னும் முனிவரும் வேள்வி செய்ய, இந்திரனனுப்பிய தேவ னொருவன் கையில் அமுது (பாயசம்) கொண்ட கிண்ணமுடன் தோ றி, இதை மனைவிகளுக்கு சமமாக பகிர்ந்தளித்தால் பிள்ளை பெறுவா களெனக் கூறி, கொண்டு வந்த கிண்ணமதை கொடுத்து மறைந்தா தசரதனும் சரியாக்கி மூவருக்கும் கொடுத்துவிட்டு களிப்புடனே எதிர்பார்த்தான்.

யாகம் முடிந்து ஆறு பருவங்கள் ழிந்தன 12 மாதங்கள் ஆனதும், சித்திரை மாதம் நவமி திதியில், னர்வசு நட்சத்திரத்தில், நவகிரகங்களில் 5 கிரகங்களின் ஆட் யிலும், உச்சத்திலுமாக இருக்கும்போது சந்திரனோடு குரு சேர்ந்திருக்கும்போது, கடக லக்கினத்தில் ராமன் பிறந்தான்.

மூலம் :

வி. எச். ரமண்ய சாஸ்திரி

விதை :

துறை ர் வல்லாளன்

இராமன் அவதாரம்

பல்லாயிரம் பெண்களையும் பட்டத்தரசி மூவரையும்
இல்லறத்திற் கன்றிமற்றும் இன்பிற்காய் பெற்றபோதும்
அல்லலுற்றான் அயோத்தியின் அரசவேறு தசரதனும்
இல்லையே பிள்ளையென்ற எண்ணத்தால் இடிந்தானல்.

இடிந்துபோன மன்னனுக்கு ஏற்றஉரை இனிதாக
கடிநகர மக்களன்றி கற்றதிருச் செல்வர்களும்
கடனாற்றும் அமைச்சன்றி கவலைகொண்ட எல்லோரும்
எடுத்துரைக்க வழியின்றி இருந்தனரே அந்நேரம்;

இந்திரனை எண்ணியிங்கே ஏற்றதொரு வினைமுடிக்க,
வந்தனைக்கு வழிகோலி வளர்த்தாலே யாகமதை
சந்ததிக்குப் பிள்ளைகளைத் தந்திடுவான் தேவரசன்
அந்தச்செயல் ஆற்றிடலாம் என்றுரைத்தான் முனியொருவன்.

முனிவனது மொழிகேட்டு மூழ்கினான் மகிழ்கடலில்
இனி ஆட்சிபெற இளவலுண்டா எனுமெண்ணம்
நன நடந்துவிடும் நம்பகமாய் முடிந்துவிடும்
எ னிமேல், கவலையில்லை என்றிருந்தான் தசரதனும்.

தசரதனும் சாதுக்களைத் தருவித்தான் அரண்மனைக்கே
விசனமதை விட்டொழிக்க, வேள்வியதை இனிதாற்ற
வசதிமிகும் இடமொன்றை விளையறுத்தான். செயலாற்ற
தசரதனல் தேர்ந்தவிடம் தகுதியொடு தோன்றியதே!

தேர்ந்தவிடம் தன்னிலுமே திரிகாலம் உணர்ந்தோரும்
பார்தனிலே பற்றற்று பேரின்ப நாட்டமுற்று
கார்கூந்தல் கன்னியரும் களிமதுவும் நீக்கியோரும்
யார்க்குமே குற்றமதை எண்ணாதார் உற்றுரவண்.

உற்றவரில் ஒருமுனிவர் உயர்ந்ததொரு தவசிரேஷ்டர்
பற்றற்ற நிலையினிலே பலவாண்டு தவமேற்றார்
குற்றமிலா அன்னவரைக் கொண்டாடி முனிவர்குழாம்
உற்றவினை முடிப்பதற்கு உயர்ந்தநிலை தந்தார்கள்.

உயர்ந்தநிலை பெற்றமுனி ஒருமிக்க மற்றவரும்
செயலாற்ற வேண்டுமென செப்பியபின் அந்தணரை
அயலழைத்து அமர்த்தியங்கே ஆரம்பித்த வேள்வியினல்,
பெயருற்றார் ரிஸ்யசிருங்கர் பொதுமக்கள் தம்மிடமே.

அந்தணரும் இங்கிதமாய் ஆவின்நெய் கூட்டிடவே
செந்தழலும் மேல்திசையின் செங்கதிரோன் சினமுற்று
வந்தநிலை எந்தநிலை? வரையறுக்கா விதமங்கே
விந்தையாய் தோன்றிப்பின் விண்முட்ட விரைந்ததுவே.

விரைந்ததுவே அனல்வேள்வி விண்ணகத்து வேந்தனிடம்
தரையினிலே ஆற்றுதலும் தவமுனிவர் செயலெனவே
தெரிந்து ...த்தான்

விண்ணவனும் மறைந்துபோனன் ந்தனுமே வியக்கலானன்
கண்ணதிலே கிண்ணமதை கண று ஒதுக்கொண்டான்
எண்ணமதின் ஈடேற்றம் இன்றெ கு நடந்ததென,
கொண்டவின்பம் உடலெங்கு தியினல் உணர்ந்திட்டான்.

இன்பமுடன் கிண்ணமதை எடு னைக் காட்டியபின்
அன்புடனே ஒருபகுதி அளித்தி ன் கோசலைக்கு
இன்னொரு பகுதியையும் இனி ாள் கைகேயிதான்
தன்பகுதி பெற்றுப்பின் தானுன் சுமத்திரையும்.

உற்றவற்றை உண்டபின் உவ ர் மனைவியரும்
பெற்றிடுவார் மூவருமே பிள்ளை தசரதனும்
இற்றைநாள் நாடாள ஈந்திடுவா ரென
சற்றேனும் கவலையின்றி தானுற் களிமிகவும்.

முனிவர்க்கோன் இனிதாக முடி வத்த தெண்ணிப்பின்
நனிமலரும் சந்தனமும் நறுமண பொருள்களுமே
கனியுடனே ஆவின்பால் கலந்து அடிதொழுது
புனிதமுற வேண்டிட்டான் பொ க் களிப்புடனே.

நாட்டமதை முனிவருமே நிறை மகிழ்மன்னன்
காட்டினிலே சாந்தையெனும் க யாம் தன்மகளை
வீட்டிற்கே அணிசெய்து விளக் மனைவியரை
காட்டினிலே முனிவரிடம் களிப் விட்டுவிட்டான்.

சாந்தையெனும் எழில்மடந்தை ின் அன்புமகள்
வேந்தரது வாழ்க்கையிலே வித் மனைவியரும்
போந்தனரே கானகத்தில் போ முனிகுடிலில்
ஏந்தல்தமைப் பெறுவோமென் ரே அவர்களுமே!

பிள்ளைகளும் எனக்குண்டு; இனியென்று,
கொள்ளையின்பம் கொண்டி ாஞ்சகாலம் தானென்று;
துள்ளியோடும் புள்ளிமானு ான் முதுமையிலும்
கள்ளமில்லா உள்ளமெனக் அரண்மனையில்.

பெண்ணாசை மண்ணாசை ட்டொழித்து
விண்ணாட்டார் போற்றுமின் னி சிருங்கருமே,
கண்ணாலே காலமெல்ல ண்களைத்தான்
கண்டவுடன் காமுற்று ட்டான்.

கோசலையின் கூந்தலை கந்திருப்பி,
ஆசையுடன் அணைத்து முத்தமிட்டு,
தாசியென்றே ஆக்கிய இன்புற்று
ஆசிரமத் திருந்தாளே னய்!

ஆசைமிக அதிகரிக்க னய்
மாசுநீக்கி மாநிலத்தில் தன்றி
ஆசைதீர்க்க இருவரை ர் சிருங்கருமே
பாசமுடன் பற்றிடவே களுமே!

கைகேயி கைபற்றி கா ன்,
மைவிழி நோக்கிநின்று டெழுந்து,
வையகத்து இன்பமுற துமுத்தம்
கையகத்துப் பொருளை தீர்த்திட்டான்.

லை சிருங்கருமே!
க்க சுமத்திரைபால்
ற வேண்டியவன்
ந்தாள் பெண்ணவளும்!!

க கதைசொல்லி
ளவூட்டி
லதனில்
ட்டாள் சுமத்திரையும்!!

ட்டைதனில்
ன் இருமாதம்!
ர் முனிவரினல்!!
மனைவியரும்!!!

ஆருக
ர் மூவருக்கும்!
சித்திரையில்
ராமனையும்!

"போற்றுபவர் போற்றட்டும்; புழுதி வாரித்
தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
எடுத்துரைப்பேன் எவர்வரினும் நில்லேன்: அஞ்சேன் !"

எண்ணம்

மலர் 5 ‖ 26—7—58 ‖ இதழ் 6

மந்திரிகளின் பொய்க் கணக்கு!

சுதந்திரம் வந்தபிறகு ஒவ்வொரு மந்திரிக்கும் அவரவர் சம்பளத்திற்கு மேல் அரசாங்கத்தின் சார்பில் அதிகமாகச் செலவழிக்கப்படுகிறது என்பதைப் பொதுமக்களுக்கு நாம் சொல்லித் தெரியவேண்டியதில்லை. வெளியூர்ச் சுற்றுப்பயணங்களை மேற்கொண்டால் ஒரு கல்லுக்கு எட்டணா வீதம் படிப்பணம் பெற்றுக்கொள்கிறார்கள் அமைச்சர்கள். சுற்றுப்பயணம் முடிந்து வருகின்றவரையில் செலவுதொகைக்குக் கணக்குக் காட்டி அரசாங்கக் கஜானாவிடம் அதற்கான பணத்தையும் அவர்கள் பெற்றுக் கொள்கிறார்கள். வெள்ளையரை முறியடிக்க இந்தத் 'தேசத்தொண்டர்'கள் பேசியபோது 'பணம் என்பது வெறும் நாணயம் மட்டும் அல்ல; அது உழைப்பின் உருவம். வியர்வையின் சொத்து' என்றெல்லாம் நாடகத்திலே கதாநாயகன் பேசுவதுபோல் பேசிக் காட்டினார்கள். மக்கள் என்ன நினைத்தார்கள்? காங்கிரஸ் கட்சி சொற்படி நடந்தால் நமது பணம் பாது காக்கப்படும் என்று மனதார நம்பினார்கள். ஆனால் நடந்ததோ அதற்கு நேர்மாறானது.

'உங்களுக்கு ஏன் இவ்வளவு சம்பளம்?' என்று கேட்டால், இது என் அந்தஸ்துக்காகத் தரப்படுவது—இதுவும் போதாதென்று என்னுடைய எழுத்து வருமானத்தையும் சேர்த்துச் செலவு செய்கிறேன் என்கிறார் பண்டித நேரு. நேருவே இப்படியென்றால் மற்றவர்களைக் கேட்கவேண்டுமா?

சுற்றுப் பயணம் போகிற மாநில அமைச்சர்கள் இதுவரை, அவர்களது சொந்தப் பணத்தைச் செலவு செய்ததாக யாரும் மெய்ப்பிக்க முடியாது. பல்கலைக் கழகக் கட்டிடத்திற்கு அடிப்படைக்கல் நாட்டுகிற நிகழ்ச்சியானாலும் 'பார்பர் ஷாப்' திறக்கிற நிகழ்ச்சியானாலும், யார் அழைக்கிறார்களோ அவர்கள் தான் அழைக்கப்படுகின்ற அமைச்சர்களுக்குச் செலவு செய்கிறார்கள். அமைச்சர்கள் தங்கள் வீட்டுக்கு வந்தாலே போதும் என்று எண்ணுகின்ற 'அப்பாவி'கள் அமைச்சர்களையா செலவு செய்ய விடுவார்கள்! ஆனால் அமைச்சர்களோ, சுற்றுப்பயணத்தில் தம் கைப்பணத்தைக் கொட்டியதாக வருந்தி கணக்கைச் சமர்ப்பிக்கிறார்கள். 'உழைப்பால் உயர்ந்த' மந்திரிகளின் தேசபக்தியின் 'அழகு' இது! ஆண்டு ஒன்றுக்கு இப்படிப்பட்ட 'வெட்டிச்செலவு'க்காக எத்தனை இலட்சம் பாழாகின்றதோ நாமறியோம்.

மைசூர் மாநில முதன் மந்திரி **பி. டி. ஜட்டி** இப்படிப்பட்ட தவறான செயல்களுக்கு முடிவு கட்டத் தீர்மானித்து ஒரு தகவலை அதிகாரிகளிடம் வெளியிட்டிருக்கிறார்.

"மந்திரிகள் மாவட்டங்களில் சுற்றுப் பயணம் செய்யும்போது சிறப்பான ஏற்பாடுகள் எதுவும் செய்யக் கூடாது. மந்திரிகளிடம் போதுமான கட்டணங்களை வசூலித்துவிட வேண்டும். பெரிய அதிகாரிகள் அவர்களின் சுற்றுப் பயணத்தின்போது சொந்தத்தில் எதுவும் செலவு செய்வதில்லை என்பதை அறிந்து மிகவும் வேதனைப்படுகிறேன்."

—இது மைசூர் முதல்வரின் குற்றச்சாட்டு. காங்கிரஸ் மந்திரிகளின் இந்த 'நேர்மை மிகுந்த' செயல் எல்லா மாநிலங்களிலும் பரவி இருப்பது வருந்தத்தக்கது. மைசூர் முந்திக் கொண்டது. அது செயல்படுத்தப்படுமானால் எவ்வளவோ பணம் அரசாங்கத்திற்கு மிச்சப்படும்.

சென்னை அந்த வழியை எப்போது பின்பற்றப் போகிறது?

— 1ம் பக்கத் தொடர்ச்சி —

கொண்டவர்கள் 'ஆங்கிலம்' என்ற ஒரு பல மொழிக் கூட்டு மொழி ஒன்றை அமைத்துவிட்டனர். இந்த ஆங்கில மொழியைத் தாய் மொழி என்று கொண்டவர்கள் படைபலமும், மூளைபலமும் பெற்ற காரணத்தால் பல்வேறு நாடுகட்கு வணிகர்களாய்த் துலாக்கோல் ஏந்திச் சென்றோர் செங்கோல் ஏந்தும் நிலை அடைந்தனர். வென்றவர் மொழி வெல்லப்பட்ட மக்கள் மேல் திணிக்கப்படுதல் உண்டு. அது போல் 'காலனி' ஆதிக்கத்தையே கடையாணியாகக்கொண்ட இங்கிலாந்துச் சீமான்கள் தங்கள் கதம்ப மொழியை, ஆங்கிலத்தைத் தாங்கள் அடிமைப்படுத்தியிருக்கும் நாடுகளில் திணிக்கத் தலைப்பட்டனர். ஆங்கிலம் பயின்றோருக்கே அரசியலில் பல உயர்வுகள் உண்டு என்ற ஒரு தடுக்கமுடியாத நிலை ஏற்பட்டமையால்தான் உலக நாடுகள் பலவற்றுள் ஆங்கிலம் படித்து அறியக்கூடிய மொழி எனத் தகுதி பெற்றது. இந்த அரசியல் உண்மையை தெரிந்தோதெரியாமலோ 'பிறமொழிச் சொற்களைக் கூசாது கடன் வாங்கியதால் ஆங்கில மொழி உலகமொழி ஆயிற்று' என்று கூறுதல் நல்ல மொழி அறிவு தேவை என்பதையே காட்டுகிறது ஆகவே எடுத்துக்காட்டாகக்கூறப்பெற்ற 'ஆங்கிலம்' பொருந்தவில்லை.

கடன்வாங்கிய ஓரிரு மொழிகளின் உயர்வையும் இழிவையும் காணலாம். உலகில் 'கிரியோல்' என்ற மொழி இன்று ஆங்கிலம், அமெரிக்க மொழிகள் சேர்ந்ததாக உள்ளது. தன் தனித் தன்மையை இழக்கப்பெற்று எலும்புக்கூடானமைக்குக் காரணம்: ஆங்கில, அமெரிக்க மொழிக் கலப்பே ஆகும். 'பிரிட்டானி என்ற மொழியில் இன்று பல்வேறுபட்ட மொழிச் சொற்கள் கலந்தமையால் தன் பழைய தன்மையை இழந்து 'ஆங்கிலம்' என்று உலவுகின்றது. ஆங்கில மொழிநூல் அறிஞர் ஒருவர் 'ஆங்கிலம் பிறமொழிச் சொற்களைக் கூசாது எடுத்து வழங்கியதால் அதன் அகராதி அளவுக்குமேல் பெருத்துவிட்டமை வருந்தக் கூடியதே' என்று கூறுகிறார்.

மொழி நூல் அறிஞர் டாக்டர் கால்டுவெல் கூறுகின்றார்! 'தமிழ் மொழி, வடமொழி போன்ற பிற மொழிச் சொற்களை இழந்து வாழ்ந்தால் முன்னைய நிலையை விடச் சிறந்து வாழும்; சிறந்து வாழுவதுடன் தனித்து வாழும்; தனித்து வாழ்வதுடன் வளரும்" என்று உறுதியாகக் கூறுகின்றார். எனவே பிறமொழி தன் தனித் தன்மையையும், தன் 'என்றும் இளமையுடைய' எழிலையும், தன் அளவிலா வளர்ச்சியையும் முற்ற முடியப் பெற இயலவில்லை. மொழி நூல் அறிவு சான்றோர் பலர் கருத்திற்கு அடிபணிதலே அரசியல் அறிவு அமையப் பெற்றோர் கடனாகும். தமிழ்மொழி வளர வேண்டும், தனித்தன்மையுடன் விளங்க வேண்டும் என்ற தணியாத ஆர்வம் கொண்ட ஒவ்வொரு தமிழ் மகனும், தமிழ் மகளும் பிறமொழிச் சொற்களைக் கூடியவரையில் குறைத்து வழங்க முயலுக. தமிழ்மொழியால் குறிப்பிட்ட பெயரையோ, பிறவற்றையோ விளக்க இயலாத நிலையில் பிற மொழி கொண்டு வழங்குதல் தவறு என்று கூறுதற்கில்லை. ஆனால் தமிழ் மொழியில் ஒரு குறிப்பிட்ட சொல்லை வழங்கத் தனிப்பட்ட சொல் இருக்கும்போது பிற மொழிச் சொல்லால் வழங்குவது தமிழ் மொழிக்குச் செய்யும் தணியாத துரோகம் மட்டுமல்ல தமிழுக்கும் இழுக்கும் ஆகும். காட்டாக HISTORY என்ற ஆங்கிலச் சொல்லிற்குத் தமிழ் 'வரலாறு'; அதைக் கூறாது 'சரித்திரம்' என்று பிறமொழியால் புகலுதல் 'நல்ல பயிருக்கு ஒரு களை' ஆகும். 'நிலநூல்' என்பதற்குப் பதில் 'பூகோளம்' என்றும் கூறுதல் தமிழ் வளர்ச்சிக்குத் தடைக் கல்லாகும்.

தமிழ்மொழியில் பிறமொழிக் கலப்பு அளவுக்கு மீறி ஆதிக்க வெறியர்களால் புகுத்தப்படுமானால், தமிழ்மொழியைக் காப்பதற்காக ஒவ்வொரு தமிழ் மகனும் உயிர் கொடுக்க நேரிடும்.

—கதிரவன்,
பி. ஏ. (ஆனர்ஸ்.)

விரைவில்!

இவர்தான்
எம். ஜி. ஆர்.!

ராஜம்-மணாளன்
எழுதுகிறார்.

வெண்பாப் போட்டி-23.

ஈற்றடி:

கண்டபயன் ஒன்றில்லை காண்.

முடிவு தேதி 9-8-58.

தென்றல் வெண்பாப் போட்டி : : சென்னை - 6.

பதவி

அன்புள்ள எழுத்தாளர் பாலு அவர்கட்கு,

வணக்கம். எங்கள் 'பொழில்' ஏட்டில் தாங்கள் அடிக்கடி எழுதிவரும் சிறு கதைகளை ரசிகர்கள் மிகவும் விரும்புகிறுர்கள். தங்கள் கதை ஒரு இதழில் விட்டுப் போய்விட்டாலும், அதைப் பெரிய குறையாகக் கருதி கடிதம் எழுதும் ரசிகர்கள் தொகை அதிகரித்து வருகிறது. தற்போது எங்கள் பத்திரிகை நிலேயத்தில் ஓர் உதவி ஆசிரியர் பதவி காலி இருக்கிறது. தங்களை அந்த இடத்தில் ஏற்றுக்கொள்ள நாங்கள் ஆவலுடன் காத்திருக்கிறுேம். உடன் பதில்—அல்லது தங்கள் வருகை.

அன்புள்ள,
காத்தவராயன்.

கடிதத்தைத் திரும்பத் திரும்பப் படித்தான் பாலு. அவனது இதயத்து உணர்ச்சிகள் எல்லாம் மகிழ்ச்சிப் பெருக்கிலே நடனம் ஆடத் தொடங்கின. கற்பனை உள்ளம், என்னென்னவோ எண்ணத் தொடங்கியது. அவனது மனக்கண் சென்ற நாள் வரலாற்றைப் படம் பிடித்துக் காட்டிக்கொண்டிருந்தது.

★

அந்த நாட்கள்! சாதாரண பாலு, எழுத்தாளன் பாலுவாகமாறிக்கொண்டிருந்த சமயம்! தன் ஒரே தாய் கதை எழுதும் வேலே வேண்டாமப்பா, என்று கூறியும் இரவுபகலாக கண் விழித்து அவன் கதை எழுதிக் கொண்டிருப்பான். எழுதியகதையை ஒருமுறை-இருமுறை- பல முறை, தானே படித்துப் பெருமைப்பட்டுக் கொண்டிருப்பான். அவனது உள்ளத்திலே, அசாதாரண மகிழ்ச்சி அப்போதெல்லாம் கூத்தாடி வந்தது. ஏதோ கிடைக்காத அருந் செல்வம் ஒன்று கிடைத்துவிட்டதாகவே அவன் எண்ணுவான்.

எழுதிய கதைகளை பத்திரிகைகளுக்கு, நம்பிக்கையுடன் அனுப்புவான். பத்திரிகைகளின் அடுத்த இதழ்களை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருப்பான். ஒரு வாரத்திற்குள் அவனது கதை, புறப்பட்ட இடத்துக்கே மீண்டும் வந்து சேரும். பாவம்! கதையைத் திரும்பப் பெற்றபடியே ஓய்ந்து போவான்! மறுபடியும் ஒரு தெம்பு வரும்! மும்முரமாக வேறு கதை எழுதி அனுப்புவான். அதன் கதியும் அப்படித்தான்!

ஒருமுறை, பிரபல பத்திரிகை ஒன்றின் அலுவலகத்துக்கு அவன் நேரடியாகச் சென்று வேலே கேட்டான். தனது அரும்பெரும் இலக்கியப் படைப்புக்களை அந்தப் பத்திரிகை ஆசிரியர் முன் சமர்ப்பித்தான்.

அவரும், அவற்றை ஆழ்ந்து படித்தார். வரிக்கு வரி விடாமல் படித்தார்; படித்துக் கொண்டே பாலுவின் முகத்தை அடிக்கொரு தரம் பார்த்துக்கொண்டார். பாலுவும் ஆசிரியரின் மகிழ்ச்சித் திருமுகத்தை அடிக்கடி பார்த்து, தன் மனதில் நம்பிக்கைக் கோட்டையை உருவாக்கிக் கொண்டிருந்தான். அவனது கதைகளின் தலேப்புக்களை ஆசிரியர் புகழ்ந்து சொல்வதைக் கேட்டபோது அவன் இதயம் பலமுறை விம்மிப் பெருத்தது. இறுதியில், அனைத்தையும் படித்துவிட்டு, "தற்போது வேலே காலி இல்லே; இருக்கும்போது சொல்லி அனுப்புகிறேன்" என்று சொல்லிவிட்டார். அந்த

வார்த்தைகளைக் கேட்டதும் தன் இதயம் வேலே செய்துகொண்டிருந்ததா, இல்லே அப்படியே நின்றுவிட்டதா என்ற சந்தேகம் வந்துவிட்டது பாலுவுக்கு. நல்லவேளை, அப்படியொன்றும் நேர்ந்து விடவில்லே. ஓரளவு தள்ளாடியபடியே வீடுவந்து சேர்ந்தான் பாலு.

மறுவாரம்! அந்தப் பிரபல பத்திரிகை "மானமுள்ள மங்கை" என்ற பாலுவின் கதையை "மானமுள்ள மாது" என்ற தலேப்பில் வெளியிட்டிருந்தது. பாலுவின் கதைகளைப் பார்வையிட்ட ஆசிரியரே அந்தக் கதையை எழுதியிருந்தார். அதைக் கண்ணுற்ற பாலு அடைந்த வேதனைக்கு அளவே கிடையாது. இப்படிப் பல ஆண்டுகள்-பலமுறைகள்-பாலு தன் வாழ்க்கையில் ஏமாற்றத்தையே எதிர்கொண்டழைத்திருக்கிறுன்.

தன் வயோதிகத் தாயுடன் அவன் கஷ்டப்பட்ட நாட்கள் மிகப்பல. ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு விதமான வேதனை. பல வருடங்களாக, சரியான நடமாட்டமில்லாமல் படுக்கையில் படுத்திருக்கும் அந்த வயோதிகத் தாயின் மனம் நோகக்கூடாதே என்பதற்காகத் தாய்க்குத் தெரியாமல்-அவள் தூங்கிவிட்ட பிறகு கதை எழுதும் பணியை மேற்கொள்வான்.

வாழ்க்கையின் பல கோணங்களிலும் அவன் அனுபவித்த துன்பம், அவனது மனநோயை அதிகப்படுத்தியதே தவிர மட்டுப் படுத்தியதாகக் காணேும். அவனது குறிக்கோள்-எழுத்தாளன் ஆகவேண்டும் என்ற இலட்சியம் - எண்ணத்தின் அளவோடுதான் இருந்ததே ஒழிய செயலுக்கு வரவில்லே.

★

தான் எதிர்பார்த்து எதிர்பார்த்து ஏங்கிக்கொண்டிருந்த ஒரு பதவி இன்று கடித உருவிலே வந்து 'வா வா' என்றழைத்துக்கொண்டிருக்கிறது. இனியும் பேசாமலிருக்க அவன் ஏமாந்தவனல்ல. உடனே சென்னைக்கு - பத்திரிகை நிலேயத்துக்குச் செல்லவேண்டும் என்ற திடமான முடிவுக்கு வந்தான். அவன் மனம் பலவிதக் கற்பனைகளை வடித்துக்கொண்டிருந்தது. தன்னைப் பற்றிக் கேவலமாகப் பேசியவர்களை இப்போது, தான், கேலி செய்யலாம்-தன் கதையைத் திருடி எழுதிய ஆசிரியரை, இனி துணிந்து கண்டித்து எழுதலாம்-காசு பணத்துக்குக் கஷ்டப்பட்ட நிலே இனி மாறிவிடலாம். இப்படிப் பலப்பல எண்ணங்கள்!

கடிதத்தில் படிந்திருந்த பார்வையை, மாற்றி, சற்றுத் திருப்பினுன். வீட்டின் ஒரு மூலே; அங்கே தொய்ந்தபடி கிடக்கும் கயிற்றுக் கட்டில்-அதிலே மெலிந்த தேகத்துடன் சதா இருமிக்கொண்டே படுத்திருக்கும் அவனது வயோதிகத் தாய். தன் ஒரே மகனைப்பற்றியே எண்ணிக்கொண்டிருக்கும் காரணத்தால் இத்தனை நாட்களாக, தனது உயிரைப் பிடித்து வைத்துக்கொண்டிருக்கிறுள் அந்தத் தாய். இப்போது அந்த அன்புருவை விட்டுவிட்டு-வெளியூர் வேலேயை ஏற்கப் போவது என்பது இயலாத காரியம். பாலுவின் மனம் சஞ்சலப்பட்டது! எந்தவித முடிவும் செய்யமுடியாமல் குழம்பியது. இறுதியில் கடிதத்தை மடித்துப் பையில்வைத்துக்கொண்டு வேலேயை ஏற்கப் புறப்பட்டான். தாயை மறந்துவிட்டு, அவளது அன்பு முகத்தை உதறித் தள்ளிவிட்டு, ஒரு அடி, முன் நடந்தான். பயங்கரமான இருமல் அவன் காலேப் பிடித்து நிறுத்தியது. "மகனே என்னை விட்டுவிட்டா செல்கிறுய்! சென்று வா! வெற்றி பெற்று வா" என்று அவன் தாய் அலறியதுபோலத் தோன்றியது. கடிதத்தை விட்டெறிந்தான். அடுத்த கணம் 'அம்மா' என்று கத்தியபடி தாயின் அருகில் சென்று அவள் தலேயைக் கோதிக் கொடுத்தான். இப்போதுதான் அவனுக்கு நிம்மதி. வியாதி உள்ள தாயைப் புறக்கணித்துவிட்டுவெளியூர்வேலேக்குப் புறப்பட்டோமே என்பதை எண்ணி அவனே வெட்கப்பட்டுக் கொண்டான்.

மறு வாரம்; வயோதிகத் தாயின் உடல்நிலே எதிர்பாராத முறையில் மிகவும் மோசமாகப் போய்விட்டது. அருகிலேயே அமர்ந்துகொண்டு அவளது தேவைகளை கவனித்துக்கொண்டிருந்தான் பாலு. திடீரென்று ஒரு பெரிய இருமல் தாயின் வாயை விட்டு வெளியேறியது. அதைத் தொடர்ந்து அவளது உயிரும் வெளியேறியது. பாலு, சோகத்தின் ஏகப் பிரதிநிதியாக மாறிவிட்டான்.

இரண்டு நாட்கள் சென்றன. பாலு, விட்டெறிந்த கடிதத்தை விடிய விடியத் தேடினுன். கடைசியில் குப்பைக் கூடையில் கிடந்தது. அதை ஆவலுடன் எடுத்துக்கொண்டு சென்னைக்குப் புறப்பட்டான். "பொழில்" பத்திரிகையில் உதவி ஆசிரியராகச் சேர்ந்துவிடலாம் என்ற எண்ணம்தான் அவனை சென்னைக்கு இழுத்துச் சென்றது. பத்திரிகாலயம் சென்ற பாலு, ஆசிரியரிடம், அவர் அனுப்பியிருந்த கடிதத்தைக் காண்பித்தான். ஆசிரியர் படித்துப் பார்த்தார்.

"ஓகோ! நீங்கள்தான் பாலுவா! மகிழ்ச்சி," என்று தொடங்கி, "மன்னிக்கவேண்டும்! தங்களிடமிருந்து யாதொரு தகவலும் இல்லாததால், நேற்று மாலேதான் உதவி ஆசிரியர் பதவிக்கு வேறொருவரை நியமித்தோம்" என்று சொன்னுர்,

தமிழ்ப்பித்தன்

ஆயிரம் தேள்கள் சேர்ந்துவந்து ஏககாலத்தில் கொட்டியது போன்றிருந்தது பாலுவுக்கு. ஆசிரியர், தொடர்ந்து ஏதேதோ சொல்லிக் கொண்டிருந்தார். அந்த பரிதாப ஜீவனின் காதில் மேற்கொண்டு எதுவுமே விழவில்லே. ★

ஐதரும் குதிரையும்

தென்னாட்டை ஆண்ட ஒப்பற்ற அரசர்களில், அரசியல்ஞானத்திலும், அறிவாற்றலிலும், செயல்புரியும் திறனிலும், எதிரிகளைக் கலங்கடித்த விதத்திலும், ஹைதர் அலியைப் போன்ற ஓர் அரசனைப் பார்ப்பது அரிதினினும் அரிது. அவருடைய அரசியல் திறமையும், ஆட்சித்திறனும், ஆங்கிலேயர்களும் கண்டு ஆச்சரியப்பட்டவை எனில் மேலும் கூற என்ன இருக்கிறது? அவர் தம் ஞாபகசக்தியைப் பற்றி எப்பல கதைகள் வழங்குகின்றன நாட்டில்; அவர் எழுதப்படிக்கத் தெரியாதவர் என்றாலும் அனைவரும் கற்றறிந்தவர்களைவிட எவ்வளவு அருமையாக ஆட்சி நடத்தினார் என்பதை விளக்கப் பலப்பல கதைகள் உலவுகின்றன. தான் சொல்லிக் கொண்டு வந்ததை எழுதியவன் அதைத் திரும்பிப் படிக்கக் கேட்டு, முதலில் சொல்லியதற்கும் அவன் எழுதியதற்கும் சரியாக இருக்கிறதா என்று உறுதி செய்து கொண்ட பிறகே கையொப்பமிடுவார் அவர். ஆங்கிலத்தில் கோணல் மாணலாக "ஹை" என்ற முதல் எழுத்தைக் கையொப்பமாக இடுவார் அவர். சொன்னதற்கு மாறாக அவன் எழுதியிருந்தான் என்றால், அவனுக்கு நிச்சயம் தண்டனையுண்டு. வேண்டுமென்றே அவன் அவ்விதம் எழுதியிருந்தால் அவனுக்கு மரண தண்டனைகூட விதிப்பார். ஹைதர் அலி சாமர்த்தியம் வாய்ந்தவர்; பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் மிகப்பெரிய எதிரி என்று ஆங்கிலேயர்கள் முடிவு கட்டுமளவிற்கு அவர்களை கிடுகிடுக்க வைத்த பேரரசன் ஹைதர் அலி. அவருடைய குணநலன்களைப் பற்றிய பல கட்டுரைகளையும், கதைகளையும் நீங்கள் வரலாற்று நூல்களில் மட்டுமல்லாமல், பத்திரிகைகளிலும் கண்டிருக்கலாம். ஹைதர் அலி குதிரைகளிடம் எவ்வளவு அன்பு பூண்டிருந்தார், அவைகளைப் பற்றிய அவர் அறிவு எத்தகையது, என்பதை ஓர் அளவிற்குக் கீழ்க்கண்ட கட்டுரையில் காணலாம்.

படை வீரர்களுக்கு அடுத்தபடியாக ஹைதர் அலி கவனமாயிருந்தது குதிரையிடத்தில்தான். ஒரு குதிரையைப் பார்த்த உடனேயே இந்தக் குதிரை, போர்க்களத்தில் வீரர்கள் ஏறிச்சென்று, சமர்புரியும் தகுதிவாய்ந்தது; இந்தக் குதிரை வில்வண்டி இழுக்க லாயக்குடையது; இக்குதிரையைச் சாரட்டில் பூட்டினால், ஒரெட்டில் பறந்துசெல்லும் திறமை வாய்ந்தது என்று ஒரு நொடியில் கண்டுப்பிடித்துக் கூறும் அற்புதமான அறிவு படைத்திருந்தார் ஹைதர்அலி. அது மட்டுமல்ல; இந்தக் குதிரையை எப்படிப்பட்ட கொட்டிலில் அடைக்கவேண்டும், எத்தகைய உணவு தரவேண்டும், எப்படிக் கழுவவேண்டும் என்று நுட்பமான அறிவு பெற்றிருந்தார் அவர். இதற்காக அவர் குதிரைக் கொட்டிலிலேயே அடைபட்டுக் கிடக்கவில்லை. குதிரைகளை நன்கு கவனித்துக் கவனித்து இத்தகைய கூர்மையான அறிவு படைத்திருந்தார். குதிரை வண்டியிழுக்க மட்டுமல்ல; சமர்க்களத்தில் பயன்பட மட்டுமல்ல, இயற்கையால் படைக்கப்பட்ட ஓர் அற்புதமான, அழகான மிருகம் என்று ஹைதர் அலி கருதி, குதிரைகளை, மனிதர்களைக் கொண்டாடுவதுபோல் போற்றிப் புகழ்ந்தார். ஹைதர் அலிக்குக் குதிரைகளிடம்இருந்த அளவு கடந்த அன்பைப் பலர் கேலி செய்யுமளவிற்கு அவர் அன்பு கரைகடந்து நின்றது; அவர் குதிரைகளிடம் கொண்டிருந்த அன்பைப்பற்றிக் குறிப்பிடாத வரலாற்று ஆசிரியர்கள் ஒருவருமில்லை.

தான் வைத்துள்ள குதிரையைக் கொண்டே ஒரு வீரனை மதிப்பிட்டுவிடலாம் என்று ஹைதர்அலி கருதினார்; உதாரணம் அவரே! குதிரைகளை ஒரு வீரன் எவ்வளவு அன்பாகவும், திறமையாகவும் நடத்துகிறானோ, அந்த அளவிற்குப் போரில் வெற்றி பெறுவான் அவன்என்று அவர் உறுதியாக நம்பினார். குதிரைகளைச் சரிவரக் காப்பாற்றாத வீரர்களுக்கு அவர் தண்டனை வழங்கியிருக்கிறார் என்றால் இன்னும் சொல்ல என்ன உள்ளது!

குதிரைகளிடம் மட்டுமல்ல, குதிரைகளை விற்போரிடமும் அவர் அன்பு கொண்டிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. காரணம் அவரே ஒரு பெரிய வியாபாரி அல்லவா? நல்ல குதிரை என்று கேள்விப்பட்டால் போதும், உடனே அதை அவர் வாங்க ஏற்பாடுகள் செய்வார். வியாபாரிகள் குதிரைகளை விற்குமுன் அவரிடம் காட்டிவிட்டுத் தான் விற்க வேண்டும் என்று ஓர் ஏற்பாடு இருந்தது. குதிரைகள் ஹைதர் அலியின் எல்லையை அடைந்த பிறகு ஹைதர்பார்வையிடுதற்கு முன்னர் இறந்துவிட்டால், அவை இறந்ததற்கு அடையாளமாக வாலில் உள்ள உரோமத்தை அவரிடம் காட்டினால், குதிரையின் விலையில் பாதியைக் கொடுக்க ஏற்பாடு செய்வார் ஹைதர் அலி! குதிரைகளை நன்கு பார்வையிடுவார்; நான்கு நாட்கள் கழித்துத் தம் ஆட்களிடம் கொடுத்துவிட உத்தரவிடுவார்; பணம் உடனே தரச் செய்வார்; வியாபாரிகளை ஊருக்கு உடனே போகச் சொல்லமாட்டார்; நல்ல விருந்து—அரிசி, ஆட்டிறைச்சி, வெண்ணெய்,-முதலியன கலந்த ஒரு சிறந்த உணவு தந்து, பேசி மகிழ்ந்து, பரிசுகள் கொடுத்துப் பிறகே விடை கொடுத்து அவர்களை அனுப்பி வைப்பார்!

ஹைதர் எவ்வளவு நற்குணங்கள் வாய்ந்தவராக இருந்தாரோ, அவ்வளவு பிடிவாத குணமும் கொண்டவராயிருந்தார். தாம் பார்வையிடுவதற்கு முன்னால் யாராவது குதிரைகளை விற்றுவிட்டதாகக் கேள்விப்பட்டால், ஒற்றர்களை உடனே அனுப்பி, அந்த வியாபாரிகளுக்குத்தகுந்த தண்டனை கொடுப்பதோடு, அவர்களிடம் இனி யாரும் குதிரைகள் வாங்கக்கூடாது என்று கடுமையான உத்தரவிடுவார்! ஐதருடைய ஆட்சியில் பாக்தாத், இராக், அரேபியா, முதலிய நாடுகளிலிருந்து எல்லாம் குதிரைகள் இருந்தன என்றால் அவர் குதிரைகள் வாங்கக் கொடுத்த பணம் அதிகம் என்று கூறமுடியாது. இத்தனை பணம் கொடுத்து வாங்கிய குதிரைகளை அவர் எப்படிக் காப்பாற்றினார், எத்தகைய உணவு கொடுத்தார் என்பதையும் கவனிக்க வேண்டும். ஒரு குதிரைக்கு ஒருநாள் உணவு; நாற்பது சேர் கொண்டகொள்ளு, தவிடு, கோதுமை மாவு, பாதாம்கொட்டை, சர்க்கரை, நெய், பால், வெண்ணெய், திராக்ஷை என்று **மிர்ஸா இக்பால்** என்ற ஆசிரியர் எழுதியுள்ளார்! இத்தகைய உணவைச் சாப்பிடும் குதிரைகள் எப்படி இருந்திருக்கக்கூடும் என்பதை ஓரளவிற்கு உங்களால் கற்பனை செய்துகொள்ள முடியும்!

ஹைதர் தன்னிடம் தோற்ற சிற்றரசர்களிடம் கப்பம் வாங்கும்போது, அவர்களிடம் நல்ல ஜாதிக் குதிரைகள் இருந்தால் அவைகளையே வாங்கிக்கொள்வதுண்டு. உதாரணமாக, அவருக்குக் கீழ்க்கண்ட சிற்றரசர்கள் கட்டிய கப்பம் பின்வருமாறு: சிட்டல்துர்க் பாளையகாரர் 1000 குதிரைகள், ராயதுர்க் பாளையகாரர் 2000 குதிரைகள், ஆனகுர்த் பாளையகாரர் 100 குதிரைகள், கனககிரி பாளையக்காரர் 200 குதிரைகள், கடப்பை நவாப் 2000 குதிரைகள் இப்படிப் பலப்பல நாடுகளிலிருந்து உயர்ந்த ரகமான குதிரைகளை வாங்கி வளர்த்து, குதிரைப் படையை மிகச் சிறந்த படையாக ஆக்கி, எதிரிகளைத் திணற அடிக்கும் திறமைபெற்றிருந்தார்.

ஹைதருக்கு எழுதப் படிக்கத் தெரிந்திருந்தால் குதிரைகளைப் பற்றிய மகத்தான நூல் ஒன்று உலக மக்களுக்குக் கிடைத்திருக்கும். அவருக்குக் 'குதிரையைப் பற்றி அத்துணை அறிவு இருந்தது என்று பல பேராசிரியர்கள் எண்ணுகின்றனர். குதிரையைப் பற்றி எல்லா விவரங்களும் அடங்கிய நூல் ஒன்று செனோபான் என்ற கிரேக்க ஆசிரியரால் எழுதப்பட்டு இன்று உலகில் உலாவுகிறது. ஹைதருக்கு எழுதத் தெரிந்திருந்தால், இந்த நூல மதிப்பிழந்து போய் இருக்கும். காரணம், செனோபான், எழுத விட்ட ஒரு விஷயத்தைப் பற்றி முழுவிவரங்களும் ஹைதர் அலிக்கு நன்கு தெரிந்திருந்தன. அதாவது குதிரை வாணிபர்களிடம் எப்படி குதிரைகளை வாங்குவது என்பதுபற்றியாம். இதில் ஹைதர் எப்படிச் சிறந்து விளங்கினார் என்பதை முன்னரே கூறியுள்ளோம்.

ஹைதர்அலி, குதிரைகளிடம் அன்பாக இருந்து, ஒரு நல்ல குதிரைப் படையை உருவாக்கி, ஆங்கில ஏகாதிபத்தியத்தை ஆட்டிப் படைக்குமளவு ஆற்றல் பெற்றிருந்தார். இப்படிப்பட்ட ஒரு மன்னனை தென்னாடு அடிக்கடி காணவில்லை.

சென்னை நகரத்தில் இன்று ஓடும் ஜட்கா வண்டிக் குதிரைகளை ஹைதர்அலி உயிர் பெற்றெழுந்து வந்து பார்வையிட நேரிட்டால், ஒன்று, தான் தற்கொலை செய்துகொள்வார், அல்லது அந்தக் குதிரைகளை அம்மாதிரி வைத்திருக்கும் வண்டிக்காரர்களைச் சுட்டுக் கொன்று விடுவார்! ★

★ நா. ஜகந்நாதன், எம். ஏ. ★

மயிலாடும் பாறை

தென்னரசு

எந்தன் துரையே,

ஐயிரெண்டு திங்களாய் மையிடா விழிகளுடன் தனித்திருக்கிறேன். நெற்றிக்குத் திலகமிட்டு, நெடிய கருங்கூந்தலைச் சீவி முடித்து, நெஞ்சைத் துளைக்கும் நறுமண மலர்சூடி என்ன பயன் என்று என் இளம் இதயம் உருகி வருகிறது. தங்கத்தட்டிலே உணவு கொள்கிறேன், தக்காளிச் சாற்றை வெள்ளித் தொன்னையில் ஊற்றி அருந்துகிறேன்; பழத்திற்கும் பசுப்பாலுக்கும் குறைவில்லை — இருந்தும் என் மனம் நிறைவு பெறவில்லை. தவிக்கிறேன். அடுத்த வீட்டு அங்கையற்கண்ணி, ஆண்டு நிறைந்த அவள் பெண் மகவுக்கு அம்புலியைக் காட்டிப் பால் சோறு ஊட்டுகிருள். நினைவுபெருத அந்தப் பிஞ்சுக்கு நிலாவின் குளுமை தெரிகிறது, அழகு தெரிகிறது. சிரித்துக்கொண்டே சோற்றைத் தின்கிறது. அதே நிலா என்னைச் சுடுகிறது. ஏளனம் செய்கிறது. "பின்புத்திக்காரப் பெண்ணே, திங்களிலே பாதி நாள் உலா வருகிறேன், அந்தப் பாதியில் ஐந்து நாட்களில் நான் ஆசை தீர ஒளி சிந்துகிறேன். காவியம் பாடுகிறவர்கள், காதலியைச் சந்திக்க நேரம் குறிக்கிறவர்கள் குழந்தை குட்டிகளோடு உல்லாசச் சோறு உண்ண எண்ணுகிறவர்கள் எல்லோருமே அந்தநாட்களை பூரணமாகப் பயன்படுத்திக் கொள்கின்றனர். நீ கொடுத்து வைக்காதவள். அனுபவிக்கத் தெரியாதவள்" என்று அந்தநிலவு என்னை ஏசித் தீர்ப்பதுபோல் எனக்குப் படுகிறது.

பிரபுவே, தினம் தினம் நான் தண்டனையை அனுபவிக்கிறேன். இரவுக்கும் பகலுக்கும் இடைப்பட்ட [illegible] யாலை நேரம், ஒரு நாளைக்கு ஒரு முறை. வருகிறது. அந்த நேரத்தில்தான் நான் செத்துப் பிழைக்கிறேன். நீங்கள் வெளிநாட்டுக்குப் புறப்படுவதற்கு முதல் நாள், அந்த இரண்டும் கெட்ட வேளையில் ஏரிக்கரையில் எலுமிச்சை மரத்துக்குப் பக்கத்தில் தொட்டுத் தோள் தழுவி கட்டியணைத்துக் கனியிதழ் கிள்ளி இன்புற்றிருந்த நிகழ்ச்சி என் நினைவுக்கு வருகிறது. தினசரி பெட்டியைத் திறந்து புடவையை எடுக்கும் போதெல்லாம் அன்று உடுத்தியிருந்த பச்சைப் பட்டுப்புடவை என்னை சாகடித்துச் சாகடித்துப் பிழைக்க வைக்கிறது. தோட்டத்திற்குப் போனால் அங்கே துவண்டு கிடக்கும் எலுமிச்சைக் கன்று கண்ணில் படுகிறது. அதன் வாடை என்னைத் தங்களிடத்திற்குத் தூக்கி வந்து விடுகிறது. இதயம் நிறைந்திருக்கும் போது பூண்டிருந்த அணிமணிகள், அருகிருந்த பொருள்கள், கண்ட காட்சிகள் வாழ்க்கை முழுதும் நீங்காத இடம் பெற்று விடுகின்றன.

தாசிகள் நேசம் மோசமே — என்ற பாடல்களைக் கேட்டுக் கேட்டுப் பழக்கப்பட்ட பின்னும், சேலை கட்டிய மாதரை நம்பினால் தெருவில் விட்டுத் தேங்கிடச் செய்வரே — என்னும் தோல்வியின் சாயல்படிந்தபலவீனக்குரல்கள் சக்கரவர்த்திகளின் சபா மண்டபங்களிலிருந்து சந்தைக் கடை மைதானம்வரை ஒலிப்பதை அறிந்த பின்னும் தாங்கள் என்னில்லம் வந்ததை நினைத்து நினைத்து மகிழ்கின்ற ஒரு இன்பத்தைத் தவிர வேறு எனக்கு எதுவும் இல்லை. பொன்னொளி வீசும் பதக்கங்களும், மின்னலிடும் வைரக் கம்மல்களும், மோதிரங்களும், மேகலாபரணங்களும் எனக்கு வாழ்வின் இன்பத்தைத் தரவில்லை. புருஷனின் புன்னகைக்கு முன்னால் பொன்னகைகளின் பளபளப்பு அடிபட்டு விடுகிறது என்பதை என்னுடைய தனிமை எனக்கு மெய்ப்பித்துக் காட்டிவிட்டது. தனிமை கொடிதுதான். அதுவும் இளமையிற் தனிமை மிக மிகக் கொடிது.

கண்ணுக்கு நிறைந்தவரே,

தத்துவங்கள் வாழ்க்கைக்குப் பயன்படாது என்பார்கள். இன்பத்தில், துன்பத்தில், தத்துவங்களைக் கண்டவர்கள் கூறும் போது அது சில நேரங்களில் பசியையும் போக்கிடும் சுவை உணவாக-தளர்ச்சியைப் போக்கிடும் நம்பிக்கை மூலிகையாக இருக்கிறது.

நான் சிறுமியாக இருந்த போது, எங்கள் வீட்டுக்கு பெரும் பெரும் செல்வந்தர்களெல்லாம் வருவார்கள். அவர்களில் கல்விகற்றவர்களுமுண்டு; அது அற்றவர்களுமுண்டு. ஒவ்வொருவரும் ஒவ்வொரு கதையைச் சொல்லுவார்கள். இப்படி எத்தனையோ கதைகளை நான் கேட்டிருக்கிறேன். புரிந்தோ புரியாமலோ நான் சிரிப்பேன். என் அன்னை என் தலையில் குட்டுவார்கள். அன்னையோ பேர்பெற்ற தாசி. நான் சிரித்தால் வந்திருக்கும் சீமான்களின் வதனங்கள் வாடிவிடுமோ என்று என் அன்னைக்குப் பயம்.

குழந்தைகளை விபரம் தெரியாதவர்கள் என்கிருர்கள். உண்மைதான். விபரம் தெரியாத அந்தப் பூக்கள், விபரந்தெரிந்த பலரைப் பல இடங்களில் திணறடிக்க வைத்துவிடுகின்றன.

யாராவது ஒரு பணக்காரரோடு என் அன்னை பேசிக் கொண்டிருப்பார்கள். நான் அந்த அறைக்குப் போவேன். வந்திருப்பவர் மாதுளை முத்துக்களை உதிர்த்து என் வாயில் போடுவார். பக்கத்தில் இருக்கும் என் அன்னை சும்மா இருக்காமல் "போம்மா, வேலைக்காரியிடம் சொல்லி அப்பாவுக்குப் பால் கொண்டு வரச் சொல்" என்பார்கள். முதன் முதலாக என் அன்னை இவ்வாறு சொன்ன போது எனக்கொரு அப்பா இருக்கிருர் என்றுதான் நினைத்தேன். ஆனல் தினசரி வந்தவர்களையெல்லாம் என் அன்னை 'அப்பா அப்பா' என்ற பிறகு எனக்குக் குழப்பம் ஏற்பட்டு விட்டது. "பக்கத்து வீட்டுப் பங்கையர்ச்செல்விக்கு ஒரு அப்பாதானே இருக்கிருர். எனக்குமட்டும் என்ன பத்து அப்பா!" என்று ஒரு நாள் கேட்டுவிட்டேன். நான் புரியாமல்தான் கேட்டேன். இப்படியெல்லாம் கேட்டால், அன்னையார் அடுப்பிலே கரண்டியைக் காயவைத்து இடுப்பிலே சுடுவார்கள் என்ருல் நான் வாயைக் கூடத் திறந்திருக்கமாட்டேன்.

நொண்டிக் குழந்தைகள், நோஞ்சக் குழந்தைகள் சமுதாயத்திலே புழங்க முடியும். அவர்களுக்கு இடமுண்டு. ஆனல் தாசிவீட்டுக் குழந்தைகள் நிம்மதியாக வாழ்ந்துவிடமுடியுமா? நினைவு தெரிகின்றவரை வழி

காட்ட எவருமில்லாமல் பெண்கள் சாம்ராஜ்யத்திற்குள்ளேயே கிடந்து உழல வேண்டும். நினைவு வந்தபிறகோ, ஊர்ப்பிள்ளைகளின் கேலிப் பேச்சு உயிரைத் தின்னத் தொடங்கிவிடுகிறது. ஊமையாக இருப்பதற்குக் காரணம் சொல்லிவிடலாம், உண்ண உணவில்லாமல் வறுமையில் வாடுவதற்குக் கூட வகைகூற வழிஇருக்கிறது. ஆனால் 'அப்பன் பெயர் தெரியாதவள்' என்று சொல்பவர்களுக்கு என்ன பதிலைக் கூறி வருவது? "தவறு என்னுடையதல்ல; என் தயாருடைய தவறு, என் தாயாரை வளர்த்த சமுதாயத்தினுடையது" என்று எளிதில் பதில் சொல்லிவிடலாம். கேலி செய்பவர்கள் இந்தப் பதிலைப் புரிந்துகொள்ளக்கூடியவர்களாகவா இருக்கிறார்கள்! இல்லை. கொடுத்த கடனை தெருவில் கேட்கும்போது எதிர்த்துப் பேசக்கூட மனம் துணிகிறது. எடுத்த பொருளை இல்லை என்று வாதாடக்கூட நா எழும்புகிறது. ஆனால் சின்னக்குழந்தைகள் 'தந்தை பெயர் தெரியாதவர்கள்' என்று இகழப்படும்போது அவர்களுக்கு நா எழுவதில்லை. நெஞ்சம் துடிக்கிறது நாடி தளர்கிறது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் வளர்ந்தவள் அத்தான் நான். இன்று ராணியைப்போல் வாழ்கிறேன். நாயகன் பக்கத்தில் இல்லையே என்று கண்கலங்கித் தவிக்கிறேன்.

பொழுது சாய்ந்தால் பொறுமுவார்கள் தாசிப்பெண்கள். கிழக்கு எப்பொழுது வெளுக்கும் - கணக்கைத் தீர்த்துவிட்டு எப்பொழுது போவான் வந்தவன் - என்று இரவைக் கண்டால் பயந்து நடுங்கும் தாசி குலத்தில் பிறந்த நான், இன்று எப்பொழுது கதிரவன் மறைவான், மணவாளனோடு பேசி மகிழலாம்' - என்று எண்ணும் குடும்பப்பெண்ணின் மனநிலையைப் பெற்றுவிட்டேன். இந்தத் தலைமுறை தப்பிவிட்டது. என்னுடைய கரங்களிலே பூட்டப்பட்டிருந்த விலங்குகளை உடைத்த பெரும் கிர்த்தி என் மகாராஜாவையே சாரும். விடுதலை வாங்கித் தந்த இந்தப் புனிதப் பணிக்கு என் ஆயுள் பரியந்தம் எந்த நேரத்திலும், எந்தப் பரிசையும் தருவதற்குத் தயாராக இருக்கிறேன், ஏற்றுக்கொள்ளத் தவறமாட்டீர்களே!

திருமயம் செங்கமலத்தின் மகள் பெருமையாக வாழ்கிறாள் என்று என் சொந்தக்காரர்கள் பேசிக்கொள்வது என் செவிகளில் படுகிறது. ஊருக்கெல்லாம் என் நிலை மதிப்பாகத் தெரிகிறது. உடையவள் என்னவோ ஏங்கி நிற்கிறேன். அன்புள்ளவரே, தாய்நாட்டிற்கு எப்பொழுது திரும்பப்போகிறீர்கள்? கொண்டு சென்ற யானைத் தந்தங்களை இன்னுமா விற்று முடியவில்லை? ஆயிரம் பொன் பெறக்கூடிய யானை தந்தம் என் வாழ்வை ஆயிரம் கூறுகளாக்கிக் கொண்டிருக்கிறது!

நாட்டிலே புதுப்புது நாட்டியக்காரிகள் கிளம்பியிருக்கிறார்கள். கோயில்களிலே அவர்கள் ஆடுகிறார்கள். கொள்ளை கொள்ளையாகப் புகழைச் சம்பாதித்துக் கொண்டு போகிறார்கள். என் ரத்தம் கொதிக்கிறது. பாதங்கள் அரிக்கின்றன. நான் தங்களுக்களித்த வாக்குறுதி என்னைத் தடுக்கிறது. நீங்கள் வந்தாலாவது நம்முடைய வீட்டு முற்றத்தில் ரத்தினக் கம்பளத்தை விரித்து உங்கள் முன்னிலையில் ஆடி வேட்கையைத் தீர்த்துக் கொள்ள முயலுவேன். நீங்களோ திரை கடல் தாண்டித் திரவியம் தேடும் பணியில் ஈடுபட்டிருக்கிறீர்கள். இருக்கிற சொத்து ஏழு தலைமுறைக்குப் போதும். இனி யாருக்கு வேண்டும் பணம்? செல்வத்தைத் தேவைப்படும்போது சேகரித்துக்கொள்ளலாம், இளமையைத் தேடிக்கொள்ளமுடியாது. எந்தக் காலத்திலும் இதயத்திலே உணர்ச்சி ஊற்றெடுக்கலாம். ஆனால் எந்தக் காலத்திலும் கன்னத்திலே மின்னலையும், கண்களிலே ஒளியையும், முகத்திலே பளபளப்பையும் காணமுடியுமா?

கண்களிலே ஆசைக் கனல் எரிந்துகொண்டிருக்கும் பருவத்தில், கன்னத்திலே இளமையின் கதுப்புகள் புடைத்து நிற்கும் வாலிபக் காலத்தில், வினயமுள்ள எண்ணங்களை அணைபோட்டுத் தடுக்கமுடியாமல் சக்தியற்றுத் தத்தளிக்கும், பசி மிகுந்த நாட்களில் நாம் காரணமில்லாமல் பிரிந்திருக்கிறோம். உங்களைச் சுற்றி ஒரு முறை பாருங்கள். புருஷனும் மனைவியும் புறாக்களைப்போல் இணைந்து போகவில்லையா? கொட்டும் மழையில் ஒரே கோணியை காதலர்கள் இறுகப் போர்த்திக் கொண்டு ஓடுவதை நீங்கள் காண்பீர்கள். அப்போதெல்லாம் என் நினைவு உங்களுக்கு வராமற் போகாது. நிச்சயமாக நினைப்பீர்கள். பெருமூச்சுவிடுவீர்கள். அந்தப் பெருமூச்சு கடலைத் தாண்டி மிதந்து வந்து என் மேனியில் பட்டால் கூடப் போதும். அதிலே நான் பேரின்பம் காண்பேன். விரைவிலே பயணப்பட்டு வாருங்கள் அத்தான். விறலி துடிக்கிறேன். புறப்படு முன் ஓலை அனுப்புங்கள். அடியாள் தொண்டித் துறைமுகத்தில் காத்திருக்கிறேன்.

ஆவித்துணைவி,

செ. ரஞ்சிதம்.

—பத்துத் திங்களாக சுமாத்ராத்தீவில் தங்கி யானைத் தந்த வியாபாரம் செய்து கொண்டிருந்த குமரப்பர் வசம் இந்த ஓலை சேர்ப்பிக்கப் பட்டபோது நன்றாக இருட்டிவிட்டது. அதே, சுமாத்ராத் தீவிற்கு ஏலக்காய் வியாபாரத்திற்குப் புறப்பட்ட சோழபுரம் சொக்கலிங்கம் செட்டியார் மூலம் ஓலையைக் கொடுத்தனுப்பியிருந்தாள் ரஞ்சிதம். அழகிய பட்டுத்துணியில் ஓலை சுற்றி வைக்கப்பட்டிருந்தது. பஞ்சைப் போன்ற மென்மை மிகுந்த பட்டுரையை அவர் பிரிக்கும்போது ரஞ்சிதத்தோடு இருந்த அந்தக் கொஞ்சநாள் இன்ப நினைவுகளெல்லாம் பளிச்சென்று தோன்றி அணைந்தன. குமரப்பர் ஓலையை ஆசை பொங்க அனுபவித்துப் பிடித்தார். ரஞ்சிதத்தின் இருதயம் அவருக்குப் புரிந்தது. பொற்கூண்டில் அடைபட்டுக் கிடக்கிறாள் என்பதை அவர் உணர்ந்தார். ஓலையைச் சுருட்டி கண்ணிலே ஒத்திக்கொண்டார். ரஞ்சிதத்தை அணைப்பதாக - முத்தமிடுவதாக எண்ணிக் கொண்டேதான் அவர் அந்த ஓலையை ஒத்திக்கொண்டிருப்பார். அவர் முகத்தில் எவ்வளவு இன்பம், குறும்பு! ஓலையை இரும்புப்பெட்டிக்குள் வைத்துவிட்டு உள்முற்றத்திலே போய் அமர்ந்தார். ரஞ்சிதத்தை வாட்டும் அதே நிலவு சுமாத்ரா தீவிலும் எரிந்துகொண்டிருந்தது. "நிலவே, நிலவே! நீ அங்கிருந்தபடியே நான் சொல்வதைக் கேட்டு, தாய்த் தமிழகத்தில் இருக்கும் என் ரஞ்சிதத்திடம் சொல்லிவிடக்கூடாதா?" என்று கெஞ்சவேண்டும்போல் அவருக்குத் தோன்றியது.

"ரஞ்சிதம், நீ எனக்காக உனது கலையை அர்ப்பணித்தாய், உனது சுதந்திரத்தைத் தத்தம் செய்தாய். இருந்தும் நீ சுகம் பெறவில்லை. நல்ல காரியங்களைச் செய்து வாழ்வில் சுகம்பெற நினைத்தவள் நீ. பெண்கள் எல்லோரும் அப்படியில்லை. ஒரு பெண்ணை அழித்து மற்றொரு பெண் வாழ நினைப்பதுமுண்டு. வாழ்க்கையை வெற்றி நிறைந்ததாக்கப் பெண்கள் எந்தக் காரியத்தையும் செய்யத் துணிவார்கள். அதற்கு நீ விதிவிலக்கு. நீ நினைத்திருந்தால், மகாராஜாக்களின் பக்கத்தில் ஒரு நாளைக்கு, சிற்றரசர்களின் மடியில் ஒரு நாளைக்கு என்று இன்பமாகக் காலத்தைக் கழித்திருக்க முடியும். உன்னை நான் முதன்முதலில் சந்தித்த சம்பவமும் நீ எனக்கு அளித்த உறுதிமொழியும் என் நினைவில் நின்று அழுதுகொண்டிருக்கின்றன" என்று குமரப்பர் ரஞ்சிதத்தை எண்ணித் தன்னை மறந்த நிலையிலே நின்றுகொண்டிருந்தார். அவரது ஓரக்கண்களிலே வியர்வைத்துளிப்போல் கண்ணீர், துளிர்விட்டு நின்றது. ஒரு நாழிகை அவர் அப்படியே நின்றார். உணவு சமைப்பவன் அழைத்தபோதுதான் திரும்பிப் பார்த்தார்.

அவருக்கு உணவு கொள்ள மனமில்லை. தமிழ்நாட்டுக்குச் செல்லும் அடுத்த கப்பல் எப்போது என்று அறியவே அவர் துடித்தார். கைவிளக்கை எடுத்துக் கொண்டு துறைமுகத்திற்குப் போனார். அங்கே அதிகாரி கையை விரித்துவிட்டார். 'இன்னும் மூன்று திங்கள்களுக்கிடையில் தமிழ்நாட்டிற்குக் கப்பல் இல்லை' என்று அதிகாரி சொன்னதும் அடிவயிற்றில் நெருப்புப் பற்றிக் கொண்டவரைப்போல் அழுது புலம்பியபடி வீட்டுக்கு வந்தார். அவருக்குப் பிடித்தமான பாற்பனியாரம் செய்துவைத்திருந்தான் சமையற்காரன். அது குமரப்பருக்குப் புளித்தது. நெய்யில் போட்டுப் புரட்டியெடுத்த செட்டிநாட்டு இடியாப்பத்தைக் கூட அவர் தொடவில்லை. தமிழ்நாட்டின் புகழ்பெற்ற ஓவியனால் தீட்டிக் கொண்டு வரப்பட்ட ரஞ்சிதத்தின் ஓவியம் தொங்கவிடப்பட்டிருந்த அவரது தனியறைக்குப் போனார். ரஞ்சிதம் அபிநயம் பிடிப்பதுபோல் வரையப்பட்டிருந்த அந்த அற்புதமான ஓவியத்திற்கு எதிரே குமரப்பர் அயர்ந்து உட்கார்ந்துவிட்டார்.

— 10-ம் பக்கம் —

தென்றல் 16-8-58 இதழில்
கண்ணதாசன் எழுதும்
ஊமையன் கோட்டை
தொடர்கதை ஆரம்பமாகிறது!
தென்றல் சென்னை

கம்யூனிஸ்ட் கருங்காலிகள்!

இந்தியக் கம்யூனிஸ்ட்க் கட்சி தன்னுடைய அமிர்தசரஸ் மாநாட்டில் இனிமேல் சமாதான வழிகளில் சோசலிச இலட்சியத்தை நாடிப் பயணம் செய்யவேண்டும் என்று தீர்மானித்துள்ளது. இந்தக் கருத்து முன்னைய நாட்களில் இந்தக் கட்சி பலாத்கார வழிகளில்தான் தன்னுடைய கொள்கைகளுக்கு வலுத்தேடி வந்துள்ளது என்பதைப் புலப்படுத்துகிறது. 'கரண்ட்' ஆசிரியர் காரகா தெரிவித்ததுபோல புலி தன் புள்ளிகளை மாற்றிக்கொண்டு புதிய வேடம் போட்டுக் காட்டிக்கொண்டுள்ளது. அவரே அறிவித்ததுபோல சிங்கத்தின் வாயினுள் தலையைக் கொடுக்கும் சர்க்கஸ்காரனை - சிங்கம் நாக்கினுல் தடவி மகிழ்வூட்டுவதுபோல கம்யூனிஸ்டுக் கட்சியும் சமாதான வழிகளைப் பற்றக் கூறியுள்ளது. 1958ம் ஆண்டில் பலாத்காரம் எங்களுக்குள்ள பண்பல்ல என்று கம்யூனிஸ்டுகள் பேசுகிருர்கள் என்ருல் அதற்குக் காரணம் அவர்கள் மறந்துவிட்டாலும் நம்போன்ருர் நினைவினின்றும் நீங்காத 1948ம் ஆண்டில் கம்யூனிஸ்டுகள் செய்து காட்டிய நிகழ்ச்சிகளாகும். கம்யூனிஸ்ட் கட்சியின் பத்து ஆண்டுகளுக்கு முந்திய வரலாற்றை மறைத்து வைத்துவிட்டு 1956ல் நடைபெற்ற பாலக்காடு மாநாட்டிலேயிருந்துதான் தங்களுடைய புதிய வரலாற்றை இன்றுவரையிலும் பேசிக்கொண்டிருக்கிருர்கள். அமிர்தசரஸ் வகுத்தவழி அருமையான - அற்புதமான -, அழகான வழியென்று அகவல் பாடித் திரிகிருர்கள். கடந்தகால அரசியல் நினைவுகளைச் சரியாகப் பெற்றிராத மக்களிடையே இந்த மதியூகிகளின் 1948 வது வருட வரலாற்றைத் தெரிவிக்க வேண்டியது புதுவேடம் போட்டுள்ளபோலித் தலைவர்களுக்கு ஒரு புதிய பாடமாகவும் இருக்கமுடியும்.

1947ம் ஆண்டில், காந்தியார் கனவு கண்ட ஏகஇந்தியா - அகண்ட பாரதம் - இரண்டாகப் பிரிக்கப்பட்டது. மௌண்ட்பேட்டன் வகுத்த அரசியல் பாதையின் மகத்துவத்தால் மாவீரன் ஜின்ஞ பாகிஸ்தான் பெற்ருர். இந்தியாவைவிட்டுப் பிரிந்தார். இந்தத் திட்டத்தை முன்னேற்றமான திட்டம் என்று கம்யூனிஸ்டுகள் வரவேற்றனர், காங்கிரசுடன் ஒட்டிக்கொள்ளவும் முயற்சித்தனர். காங்கிரசைவிட்டுப் பிரிந்து தனிக்கட்சி அமைக்க முயன்ற சோசலிஸ்டுகளுக்கு அன்றையதினம் கம்யூனிஸ்ட்க் கட்சியின் காரியதரிசியாக இருந்த பி. ஸி. ஜோஷியும்-பாமிதத்தும் உதவியாக இருந்து நேருவுக்கு ஆதரவு திரட்டினுர்கள். சர்தார் பட்டேலின் முயற்சிகளுக்கெல்லாம் எதிராக நேருவைக் காப்பாற்றக் கம்யூனிஸ்டுகள் சபதம் எடுத்துக்கொண்டார்கள். ஆனுல் இந்தக் கூட்டுறவுக் கொள்கைகளினுல் கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினர்களுக்குள் மனக்கசப்பும் குமுறலும் அலை அலையாக வளர்ந்தன. இந்த நேரத்தில், கம்யூனிஸ்டுக் கட்சியல்லாத சர்க்கார்களோடு முற்றும் ஒத்துழைக்கலாகாதுஎன்றசோவியத் ரஷ்யாவின் அயல்நாட்டுக் கொள்கைக்கேற்ப இந்தியக் கம்யூனிஸ்டுகளும் செயல்பட வேண்டிய கட்டாயத்திற்கு அழைத்துக்செல்லப்பட்டார்கள். 1947 செப்டம்பரில் போலந்தில் காமின்பார்ம் அமைக்கப்பட்டது.

"பலாத்க்காரம் என்பது இரண்டுபக்கமும் கூர் உள்ள வாள். அது குத்துவதற்கு மட்டுமல்ல—அதை ஏந்திச் செல்லுகிறவனுக்குக் கூடச் சில நேரங்களில் கேடுகளை உண்டாக்கக் கூடுர். ஆகவே பலாத்காரம் வேண்டாம் என்று தி.மு.க. அந்த வேட்டு முறையைத் தள்ளிவிட்டது."

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியக் கமிட்டி டிசம்பர் 1947-ல் உலக யுத்தத்திற்குப் பிந்திய கொள்கையை மாற்றிக்கொள்ள முடிவு செய்தது. 1947-ஆகஸ்ட் 15-ல் சுதந்திரச் சங்கெடுத்து ஊதிய கம்யூனிஸ்டுகள், ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே என்று பண்ணிசைத்தவர்கள்-உடனடியாக பலாத்காரச் செயல்களில் இறங்கும்படி அழைக்கப்பட்ட தோழர் பி. டி. ரணதிவேயின் கொள்கைகளுக்குப் பெரிதும் ஆதரவு தந்தனர். இந்தப் புதிய கொள்கையைக் கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னணி அங்கத்தினர்களும் தலைவர்களும் தெளிவுற உணர்ந்து கொள்வதற்காக 1948 பிப்ரவரி-மார்ச் மாதங்களில் கல்கத்தாவில் நடைபெற்ற இரண்டாவது மாநாட்டில் விளக்கம் தரப்பட்டது. அதிகாரப்பூர்வமாகவும் ரகசியமாகவும்-அறிவிக்கப்பட்டது. பொதுச் செயலாளராக இருந்த தோழர் பி. ஸி ஜோஷி டிசம்பர் மாதத்தில் கொள்கை மாற்றத்திற்குச் சம்மதம் தந்தார். ஆனுல் அவரைத் தொலைக்க முடிவு செய்துவிட்ட ரணதிவேயின் திரைமறைவுச் செயல்களினுல் தொடர்ச்சியாகக் குற்றஞ்சாட்டப்பட்டு வந்தார் கடைசியில் கல்கத்தா காங்கிரஸ் 1948-பிப்ரவரி 28 முதல் மார்ச் 6 தேதி வரை நடைபெற்று முடிந்தபோது ஜோஷி மத்தியக் கமிட்டியிலிருந்து நீக்கப்பட்டார். பி. டி. ரணதிவே தன் விருப்பத்திற்கேற்ப மகுடம் சூட்டிக்கொண்டார், புதிய பொதுச் செயலாளராக! அமிர்தசரஸ் மாநாட்டைப் போலவே கல்கத்தா மாநாடுபற்றியும் அரசியல் கட்டுரைகள் வெளியிடப்பட்டன. இந்தியக் கமயூனிஸ்ட் கட்சியின் கொள்கை மாற்றங்கள் சோவியத்தின் ராணுவப் பொருளாதாரப் போக்கிலும்-காமிர்ன் பாரத்தின் கட்டளைக்கிணங்கவும் அளிக்கப்பட்டன. குறிப்பிட்டத் தந்திரச்செயல்கள் பொலிட்பீரோவில் விவாதிக்கப்பட்டன. 1949 ஜூலையில் 'கம்யூனிஸ்டு' என்ற பத்திரிகையில் பலாத்காரப் போக்குத்தான் சரியான வழியென்றும் அதற்குத் தயாராகும்படியும் கம்யூனிஸ்டுகளுக்கு கட்டளைகள் கிடைத்தன. அமிர்தசரஸ் மாநாட்டில் தங்களது உருவத்தையும் உள்ளத்தையும் மாற்றிக்கொண்டுவிட்டதாகப் பேசுகின்ற கம்யூனிஸ்டுகள் 1949ல் என்ன செய்துகொண்டிருந்தார்கள் என்பதை நானே சொன்னுல் முன்னேற்றக் கழகத்துக்காரன் அதிலும் கட்சியைவிட்டு விலகிக்கொண்டவன் பிற்போக்கு வாதியென்று உடனே வசைபாட தமிழ்நாட்டுக் கம்யூனிஸ்டுகள் தயாராகிவிடுவார்கள். எனவே 1949 பிப்ரவரி 28-ல் அரசியல் நிர்ணய சபையில் சவகர்லால்நேரு அவர்கள் பேசியதிலுள்ள சில வரிகளைக் கம்யூனிஸ்டுகளுக்கும்-தமிழகத்துப் பொதுமக்களுக்கும் எடுத்துக் காட்ட விரும்புகிறேன். —"சென்ற வருடத்தில் **இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சி அரசாங்கத்தோடு பகிரங்க விரோதியானது மட்டுமன்று பயங்கரப் புரட்சியென்று சொல்லக்கூடிய ஒரு கொள்கையையும் பின்பற்றியுள்ளது. இந்தக் கொள்கையின் பயனுக, இந்தியாவின் எல்லைக்குட்பட்ட சில பகுதிகளில் பலாத்காரமும், படுகொலைகளும், தீக்கொளுத்தலும், கொள்ளையடித்தலும் மனதாரச் சொத்துக்களை அழித்தலும் ஆகியவைகளும் நடைபெற்றுள்ளன. தனது கொள்கையை ஒப்புக்கொள்ளாதவர்களைப் பயமுறுத்தும், ஒரு நூதன முறையையும், இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சி கைக்கொண்டுள்ளது. அவர்கள் பிறர் உரிமைகளில் தலையிடுவது மட்டுமல்லாது சமூகத்திற்கே விரோதமான, சமூகத்தையே அழிப்பதுமான உரிமைகளையும் கேட்பது விந்தையிலும் விந்தையே. இந்தியக் கம்யூனிஸ்டுகள் பலரை அரசாங்கம் கைது செய்திருக்கிறது. அவர்கள் தம் நாச வேலைகளுக்குப் போக்குவரவு சாதனங்கள். தப்புவதற்காக எல்லா மாகாண சர்க்கார்களும் அவ்வாறே செய்யுமாறு ஆலோசனை கூறியிருக்கிருேம்"**

இந்தக் குற்றச்சாட்டுக்களுக்குக் காரணங்கள் நிறைய இருந்தன. நில உடமையாளர்களுக்கும், அரசாங்கத்திற்கும் விரோதமாக ஐதராபாத் தெலிங்கானுப் பகுதியில் ஆயுதம் தாங்கிய போராட்டத்தில் உழவர்களைத் தூண்டிவிட்டவர்கள் கம்யூனிஸ்டுகளே. எந்தக் கம்யூனிஸ்டுகள்? அமிர்தசரசில் சமாதான வழிகளில்-சோசலிசம் காணத்துடிக்கும் கலியுகத்துக் கம்யூனிஸ்டுகள்! கம்யூனிஸ்டுகள் ரஸாக்கர்களிடமிருந்து ஆயுதங்கள் பெற்றுக்கொண்டு, ஈவிரக்கமற்ற செயல்களில் தங்களை ஈடுபடுத்திக்கொண்டார்கள். சீனக் கம்யூனிஸ்டுகள் அமைத்த ஆட்சியைப்போல் ஐதராபாத்திலும் அமைப்பதே அவர்களது அல்ப ஆசை என்பது கம்யூனிஸ்டுக் கட்சியின் பல வெளியிடுகளிலும் காணப்படுகின்றது. அண்மையில் சங்கரன் நம்பூதிரிபாட் உள்நாட்டு போர் பற்றி அறிவித்ததும் இந்த அடிப்படையிலே தான் என்பதை எவரும் எளிதில் உணரமுடியும். தெலிங்கானுவில் செய்ததுபோலவே இதரபகுதிகளான வங்கத்திலும் - பஞ்சாப்பிலும் - தமிழகத்து தஞ்சை மாவட்டத்திலும், மலையாளத்திலும்-அஸ்ஸாமிலும்கூட உழவர் கிளர்ச்சிகளை உண்டாக்கி வைத்தனர். ரணதிவேயும் - மற்ற கம்யூனிஸ்டுகளும் சர்க்காரை சவாலுக்கு அழைத்தனர். இறுதியில் சங்கடத்தில் மாட்டிக்கொண்டனர். மே 48ல் வங்கத்திலும், செப்டம்பர் 1949ல் சென்னையிலும் கம்யூனிஸ்ட் கட்சிக்குத் தடை விதிக்கப்பட்டது. 1949 இறுதியில் கம்யூனிஸ்டுகளின் புதிய கொள்கையான பலாத்காரப் போர் தோற்றது. அதன் செங்கொடிச் சாயம்-பாமரமக்களின் குருதியினுல் நனைந்துபோன சாயம் தானு வெளுத்தது. தோழர் எஸ். ஏ. டாங்கே போன்றவர்கள் கம்பிக்குள்ளே இருந்த காரணத்தினுல் கலவரத்தைத் தொடர்ந்து நடத்த இயவில்லை. தெலிங்கானு ராணுவ நடவடிக்கையின்போது கம்யூனிஸ்டுகள் காடுகளுக்குள் துரத்தப்பட்டனர். அகில இந்தியத் தொழிற் சங்க காங்கிரசின் ஒத்துழைப்பினுல் நடமாட முயன்ற கம்யூனிஸ்டுகளுக்குப் பொதுமக்களிடம் அனுதாபம் பெற இயலவில்லை.

கம்யூனிஸ்ட் கட்சியின் காரியதரிசிப் பதவியிலிருந்து விலக்கப்பட்ட தோழர் பி. ஸி. ஜோஷி "மாதம் தோறும் இன்றுவரையிலும் அங்கத்தினரின் தொகை குறைந்துகொண்டே வருகிறது. மிகச் சிறிய எண்ணிக்கையாகிவிட்டது. சீனக் கம்யூனிஸ்டுகளின் வெற்றி உலகக் கம்யூனிஸ்டுகளின் மாட்சியாகும். ஆனுல் **இந்தியக் கம்யூனிஸ்ட்க் கட்சியின் வீழ்ச்சி அதன் வெட்க மிக்க தாழ்ச்சியாகும்"** என்று குறிப்பிட்டு. ரணதிவேயின் ரணகளக் கொள்கையைக் கண்டித்தார். ஆந்திரக் கம்யூனிஸ்டுகள் நிலஉரிமைப் போராட்டத்தில் சீனக்கொள்கையைப் பின்பற்ற விரும்பினர். ஆனுல் பொலிட்பீரோ தடுத்தது - மாசேதுங்கின் போராட்டத்தைக் கேலி செய்தது. இருப்பினும் புதிய சீனம் பெற்றவுடன் வழக்கம்போல முன்னைய பேச்சுக்களை ஒதுக்கிவிட்டுப் பாராட்டினுர்கள்! கம்யூனிஸ்ட்க் கட்சி மீண்டும் தன் கொள்கையை மாற்ற வேண்டிய நெருக்கடி ஏற்பட்டது. கலவரக்கொள்கையை வகுத்துக் கொடுத்த பி. டி. ரணதிவே தனது முந்திய தவறுகளுக்காக வருந்தி ஒரு அறிக்கை விடுத்தார். அதனை உலக காமின்பாரமும் - பல்வேறு பகுதி இந்தியக் கம்யூனிஸ்டுகளும் ஏற்றுக் கொள்ளவில்லை. ரணதிவேயையும் அவருடைய தாசானு தாசர்களையும் பதவியிலிருந்து விலக்கி பொலிட்பீரோ கலைக்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தினுர். 1950ம் ஆண்டு மே-ஜுன்-திங்கள் கூட்டங்களில் கம்யூனிஸ்டுக்கட்சி ரணதிவேயைக் கட்சியைவிட்டு வெளியேற்றவும்-பொதுக்காரியதரிசியாக ஆந்திர நாட்டு ராஜேஸ்வரராவ் என்ற பெருமுதலாளியை நியமிக்கவும் முடிவு செய்தனர். ஆனுல் சோவியத்-காமின்பாரத்தின் கட்டளைக்குத் தலை வணங்கத் தவறிய அவர் 1951ல் பதவியிலிருந்து தள்ளப்பட்டார் அஜய்

கூலிக்கு மாரடிக்கும் போலித் தலைவர்கள்!

குமார்கோஷ் அமர்த்தப்பட்டார். அமிர்தசரஸ் மாநாட்டில் அவருக்கும் ஆபத்து வந்தது. புதிய குமுறல்களையும் குழப்பங்களையும் மாற்ற முயற்சி செய்தார். தோழர் பி. ஸி. ஜோஷியை கட்சிக்குள் இழுத்துக்கொண்டார். என்றாலும்-1958 ல் தான் அவரும்-ரணதிவேயும் - காரியதரிசிகளாக்கப் பட்டுள்ளனர்! இந்தியக் கம்யூனிஸ்டுகள் இந்தக் கட்டத்திற்கு வந்து சேருவதில் பலவிதத் தோற்றங்களைப் பெற்றனர். இன்றைக்கு இன அடிப்படையில் தனிநாடு வேண்டும் என்ற கழக நோக்கத்தைக் கண்டிக்கும் இவர்கள்தான் 'பாகிஸ்தான் கோரிக்கையை அலசி ஆராய்ந்து பார்த்தால் அது சுதந்திரக் கோரிக்கை என்று புலப்படும். இந்திய சுதந்திரம் இந்திய மக்களின் கோரிக்கையாக இருப்பதுபோல் அதுவும் ஒரு சுதந்திரக் கோரிக்கைதான்'' என்றும், ''ஒவ்வொரு தேசிய இனத்தின் மனப்பூர்வமான ஒத்துழைப்பைப் பெறுமல் எல்லா மாகாணங்களுக்கும் ஒரு மத்திய அரசாங்கம் இருக்கத்தான் வேண்டுமென்பது குதிரைக்குமுன் வண்டியைக் கட்டுவதுபோலாகும்'' என்பதாகவும்கூட அறிக்கைகள் வெளியிட்டார்கள்! ஆனால் இந்தத் தத்துவஞானிகள்-தமிழகத்துத் தலையாட்டிகள்தான் திராவிடத்தை ஏற்கத் தயங்குகிறார்கள்.

கம்யூனிஸ்டுகள் நாச வேலைக்காரர்கள் என்று பாராளுமன்றத்தில் நேரு பேசினார். அதன் பிறகு 1952ல் வேறொருவர் இவர்களைப்பற்றிப் பேசினார்! அவர் பெயரைக் கேட்டால் பலர் திடுக்கிட்டுப் போவார்கள். 1952-ம் ஆண்டு மே மாதம் 29-ந் தேதி ரயில்வே வரவு செலவுத் திட்டத்தில் பேசியபோது அந்தப் பெரிய மனிதர் குறிப்பிட்டார். **"1942-க்கு முன்னாலிருந்தே தேசிய உணர்ச்சி கொந்தளித்துக்கொண்டிருந்த சமயத்தில் நமது தேச மக்களை ரயில்வேயில் நாச வேலைகளையும் அபாயங்களையும் காங்கிரஸ்காரர்களுடன் சேர்ந்து செய்தனர். இன்று, கம்யூனிஸ்டுகள் அவர்களைப் பின்பற்றுகின்றனர்''** என்றும் விளக்கம் தந்தார்! உடனே கம்யூனிஸ்டு உறுப்பினர் பி. சுந்தரய்யா என்பவர் ''இது பொய்'' என்றார். பதிலுக்கு அந்தப் புனிதர்- ''இது பொய் அல்ல. அரசியல் காரணங்களுக்காகச் செய்யப்படும் இவைகளை முதலில் காங்கிரஸ்காரர்கள் துவக்கினார்கள். இன்று கம்யூனிஸ்டுகள் செய்கிறார்கள்'' என்று மீண்டும் குற்றம்சாட்டினார்! அவர்தான் எச். டி. ராஜா! இவருக்காகத்தான் 1957-ம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் தமிழ்நாட்டுக் கம்யூனிஸ்டுகள் அவர் ஒரு பெரு முதலாளி என்பதையும் மறந்து கூலிக்கு வேலை செய்தார்கள். ஒரே காரணம், முன்னேற்றக் கழகத்தை எதிர்க்க வேண்டுமென்பது! மீண்டும் அவரை இப்போது பாராளுமன்ற மேல் சபைக்கு அனுப்பி வைக்கவும், சென்னை சட்ட சபையிலிருக்கும் நான்கு கம்யூனிஸ்டுகளையும்—தமிழ்நாட்டுக் கமிட்டி எச். டி. ராஜாவுக்காக ஏலம் போட்டது. அவர் வெற்றியைத் தங்கள் வெற்றியாகவும் விளம்பரப்படுத்திக் கொண்டார்கள்! கம்யூனிஸ்டுகள் இதுபோலவே முத்துராமலிங்கம் அவர்களுக்காக இப்போது கண்ணீர் வடிக்கிறார்கள். முதுகுளத்தூர் பயங்கரம் என்று பேசுகிறார்கள். இவர்களைப்பற்றி அவர் 23-3-54-ல் சென்னை சட்ட சபையில் பேசும்போது- **''இங்கே கிளர்ச்சி நடத்தும் கம்யூனிஸ்டுகள் வெளிநாட்டு அரசியலையே அது தரும் வாழ்வையே பெரிதாக மதித்து ரஷ்ய நாட்டுத் தலைவர்களையே தங்கள் தலைவர்களாகக் கொண்டிருக்கக்கூடியவர்கள்''** என்று பிரபல எதிர்க்கட்சித் தலைவர் பி. ராமமூர்த்திக்கு முன்பாகவே குறிப்பிட்டார்! அரசியல் நொண்டித்தனங்களுக்குப் பெயர்பெற்ற ஒரு கட்சி இப்படி அவமானப்பட்டது, இன்றைக்கும் சட்ட சபை நடவடிக்கைப் புத்தகங்களில் காணச் சகிக்காத பகுதியாக இருக்கிறதென்பதை அவர்கள் எங்கே உணரப் போகிறார்கள்! தனித்து நிற்கமுடியாத காங்கிரஸ் சீர்திருத்தக் கமிட்டியினர்தான் முத்துராமலிங்கரின் முன்னேற்றக் கட்சிக்கு புகழும் பெருமையும் தேடித் தருவதற்காகத் தங்களை அர்ப்பணித்துவிட்டார்கள். ஆனால் கம்யூனிஸ்டுகள் கேவலம் சில ஓட்டுக்களுக்காக அந்த இரு கூட்டத்தாரின் முன்னைய கடுமொழிகளையெல்லாம் மறந்துவிட்டுக் கூடிக் குலாவுகிறார்கள்! இது எந்த வகைக் கொள்கைப் பிடிப்போ?

''இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி ஒற்றைக்கல்லில் உருவான போராடும் ஸ்தாபனம். அதன் உறுதியான ஐக்கியத்தாலும் உருக்குப்போன்ற கட்டுப்பாட்டாலும் வலுவடைந்திருப்பது திட்டத்திலிருந்து சறுக்கலுக்கோ, கட்சிக் கட்டுப்பாட்டை மீறுவதற்கோ, கட்சிக்குள் கோஷ்டிகள் அமைப்பதற்கோ இடங்கொடுக்காத முறையில் கட்சி பூராவிலும் தனது குறிக்கோள்களிலும் நடவடிக்கை செயல்முறைகளிலும் ஒருமித்து நின்று இயங்குவதே கட்சியின்பலம்''- தோழர் என். சங்கரய்யா என்பவர் கம்யூனிஸ்ட்க் கட்சியென்றால் என்ன என்பதை இப்படி விளக்கியிருக்கிறார். இது எந்த அளவுக்கு வாய்ப்பந்தல் அலங்காரம் என்பதனை - மத்தியக் கமிட்டி-பரிசீலனை செய்து நமக்குத் தெரிவித்துள்ளது-நியாயம், நேர்மையைத் தழுவிக்கொள்ள விரும்பும் எவரும் பின்வரும் மதிப்பீட்டையும் தெரிந்துகொள்ளவேண்டும். ''கடந்த பொதுத் தேர்தல் நமக்குக் கற்றுத் தரும் ஆசானாக விளங்கிற்று. அரசியல் பொருளாதாரப் பிரச்சினைகள் மீது நமக்கிருந்த போக்குப் பற்றியும் முக்கிய பிரச்சினைகளில் நமது நடைமுறைத் தந்திரங்களைப் பற்றியும் **கட்சியின் அரசியல் கொள்கையைப் பற்றியுமே கருத்து வேறுபாடுகள் கட்சியில் எழுந்தன. பாலக்காட்டு மாநாட்டிற்குப் பின்புங்கூட இந்த வேறுபாடுகள் முற்றிலும் தீர்த்துவைக்கப்படவில்லை. கட்சி அணிகளிடையே அரசியல் அபிப்பிராய பேதமும் குழப்பமும் தொடர்ந்து நிலவி வந்தது-கட்சி அமைப்பு மிகவும் மோசமான - பலகீனமான நிலையில்தான் இருந்துவந்தது''** - இந்தப் பொன்மொழிகள் - உருக்குப் போன்ற கட்டுப்பாட்டை உருத் தெரியாமல் உடைத்தெறிந்துவிட்ட சம்மட்டி அடிகள் - மத்தியக்கமிட்டி அறிக்கை தந்துள்ள அரிவாள் வெட்டுக்கள் இப்படியுள்ளன! இந்த இரண்டு வகையான செய்திகளையும் கம்யூனிஸ்டுகளே நமக்குத் தெரிவித்திருக்கிறார்கள். இவைகளையெல்லாம் நாம் மறந்துவிடாமல் கம்யூனிஸ்டுகளின் கடைக்கால கணிப்புக்கு ஆதாரமாக வைத்துக்கொண்டுள்ளோம் - இது புரியாமல் - ஆழந் தெரியாமல் தலையிட்டு அவதிப்படும் கம்யூனிஸ்ட்கள் - அமிர்தசரசை அறிமுகப்படுத்துகிறார்கள். பகத்சிங்கின் தோழன்-பாட்டாளித் தலைவன்-அஜய் குமார்கோஷ் அள்ளித்தெளித்த வாசகங்களைத் தினமும் கூறுகிறார்கள்.

அந்தப் பெருமதிப்பிற்குரிய தோழர்களைக் கேட்டுக்கொள்வேன்; உங்கள் கொள்கை அகிலத்துக்கே வழிகாட்டக்கூடியதுதான் என்றால், **''பாலக்காட்டுத் தீர்மானம் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டாலுங்கூட, மகாநாட்டிற்கு வந்திருந்த பல தோழர்கள் தீர்மானத்தின் பல அம்சங்களை ஒத்துக் கொள்ளவில்லை. முக்கிய அம்சங்களில் கட்சிக் காங்கிரசிற்குமாறுபட்ட தீர்மானத்தை வைத்தார்கள் — ஏற்றுக்கொள்ளவில்லை''** இதுவும் உங்கள் மத்தியக்கமிட்டி அறிக்கைதான்! இதற்கென்ன சொல்கிறீர்கள்?

திராவிட முன்னேற்றக் கழகம் கம்யூனிஸ்டுகளைப் பற்றிக் கூறும் கருத்துரைகளை கவனிக்க மறுக்கிறார்கள். பிரிவினை வாதிகளின் செல்லுபடியாகாத தீர்ப்பு என்றும் மதிப்பிடுகிறார்கள். அதே வேளையில் கம்யூனிஸ்டு கட்சியின் தரங் கெட்டதனத்தை உணரத் தவறிவிடுகிறார்கள். எவ்வளவு நேர்மையான குறிப்பாக இருந்தாலும் இந்தப் பரந்த கண்ணோட்டத்தவருக்குப் புரிவதில்லை! கொஞ்சம் கடுமையாகக் கேட்டால் வெகுஜனப் பிரியர்கள் வெகுண்டெழுந்துவிடுவார்கள்! அந்த அமிர்தசரஸ் அணிவகுப்பிலேயிருக்கும் அத்தனை பேர்களுக்கும் அன்பின் காணிக்கையாகச் சில வார்த்தைகளைத் தெரிவிக்கிறேன். **''இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியானது பல தடவைகளில் செய்துள்ள கடும் தவறுகளின் காரணமாக-நம்மால் தெளிவாக ஒப்புக் கொள்ளப்பட்டுள்ள தவறுகளின் காரணமாக-கட்சியின் நண்பர்கள் என்று சொல்லிக்கொள்ளுகிறவர்கள் உள்ளிட்ட பலர், அதன் சாதனைகளைக் குறைத்துப் பேசும்படியான ஒரு போக்கு வளர்ந்துள்ளது. இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் சரித்திரமே திரிபுகள் நிறைந்த சரித்திரம் தான் என்றும், கட்சி சாதித்துள்ள சாதனை மிகச் சொற்பம் தான் என்றும், கட்சிக்குக் கிடைத்திருக்கிற இன்றைய அந்தஸ்துக்கும் காரணம் அநேகமாக சோவியத் நாட்டின் சாதனைகள், சீனமக்கள் ஜனநாயகப் புரட்சியின் வெற்றி ஆகியவை தான் என்று இவர்கள் பேசுகிறார்கள். இந்த அபிப்பிராயம் சில சமயங்களில் பகிரங்கமாகச் சொல்லப்படுகிறது. இதை ஒரு கனமும் மறந்துவிடக்கூடாது. நமது சொந்த சரிதத்திலிருந்து சரியான பாடங்களை நாம் கற்றுக் கொள்ள வேண்டும்''**-யார் இந்த உண்மை விளம்பி? கம்யூனிஸ்டுக் கட்சியை விட்டு விலகியவரா? விலக்கப்பட்டவரா? அல்ல, தோழர்களே அல்ல! அஜாய்குமார் கோஷ்-அஜய் கோஷ் அவர்களேதான்!

''பல மாகாணங்களில் சித்தாந்த வேலைகள் இன்று அளவிலும் மிகக் குறைவு, தரத்திலும் மிக மிகக் குறைவு. இன்றுள்ள கம்யூனிஸ்ட் மாணவத் தலைவர்களில் பெரும்பாலோர்க்கு மார்க்சிய ஞானம் மிகக் குறைவே. சித்தாந்த ரீதியாகத் தங்களை வளர்த்துக்கொள்ள வேண்டுமென்று அவர்கள் முயல்வதில்லை. இதனால் இயக்கம் முழுவதற்கும் மிகப்பெரிய ஆபத்து ஏற்படும்'' இந்தியக் கம்யூனிஸ்டுகளுக்கு மார்க்சிய ஞானம் குறைவு என்று எங்கள் நாவலர் சொல்லியிருந்தால், நாக் கறுக்கத் துடிப்பீர்கள். கலைஞரும் கவிஞரும் சொல்லியிருந்தால் கல்லால் அடிக்க ஓடிவருவீர்கள், அறிஞர் அறிவித்திருந்தால் - அவதூறு மொழிகளினாலே கல்யாணராகங் கலந்து பேசியிருப்பீர்கள். ஆனால் நாங்கள் சந்தேகப்படுகிறோமே தவிர சந்து முனையிலே நின்று சிந்து பாடினதில்லை! ''கம்யூனிஸ்டுக் கட்சியினருக்கு மார்க்சிய ஞானம் மிகக் குறைவு'' என்று தெரிவித்திருப்பவர்-உங்கள் தலைவர் - ராமமூர்த்தியும், ஜீவானந்தமும் எட்டிப்பிடிக்க முடியாத உயரத்திலும், கல்யாணசுந்தரங்களும் தங்கமணிகளும் ஏறிட்டுப் பார்க்கமுடியாத தூரத்திலும் - கம்யூனிஸ்டுக் கட்சியின் பிரதமச் செயலாளராக இருக்கும் அஜய் அல்லவா இப்படிச் சொல்லியிருக்கிறார்! தமிழ்நாட்டுத் தூதுவர்களை - ஜனசக்தி தயாரிப்பாளர்களை-ஏன்-ஜீ வா; கே. எம்; ஐ. மா. பா; கே. ஆர்; மா. ஜீ. னி; எம். ஆர். வி; பி. ஆர்; இவர்கள் அத்தனை பேர்களையும் கேட்கிறேன், திராவிட முன்னேற்றக் கழகத்தவர் பற்றி தினமும் திட்டுகின்ற நீங்கள் ஏன் இந்தக் குற்றச்சாட்டுகளுக்கு-உங்களின் வழிகாட்டி - ஞானபண்டிதன்-அஜய்அவர்களின் அறிக்கைக்கு சரியான மறுமொழி கூறவில்லை? நீங்களும் மேடையேறுகிறீர்கள். பேனாப் பிடிக்கிறீர்கள். தொழிலாளர் பாங்க் - இன்ஸ்யூரன்ஸ் - ரயில்வே-கம்பன்-வம்பன் - இப்படி இலாகா வைத்துக்கொண்டு விளக்கம் தருகிறீர்கள். ஏன் மேலே சொன்ன பல கருத்துரைகளை மறுக்கவில்லை? அஜய் சொன்னது உண்மையா? அல்லது கம்யூனிஸ்டுகள்தான் புனிதம் பெற்றவர்கள், மற்றவர்கள் மங்கிப்போன கண்ணாடித்துண்டுகள் என்று நீங்கள் எல்லாம் பேசுவதும் எழுதுவதும் உண்மையா? திராவிட முன்னேற்றக் கழகத்தின்மீது - அறிவியக்கத்தார்மீது ஈட்டி எறியவேண்டாம். நாங்கள் அவ்வளவு ஆதாரமில்லாத பலமற்ற பீடத்திலேயில்லை! இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சி ''அரசியல் கட்டுரை'' (2-ம் பதிப்பு மே, '49-பக்கம் 61) பி. ஸி. ஜோஷி எழுதிய ''கொள்கைகள்'' பக்கம் 14. ''இந்தியாவில் கம்யூனிஸ்டுகளின் அட்டூழியம்'' (செப்டம்பர் 1949-இந்திய சர்க்கார் வெளியீடு பக்கம் 3-7) ஸ்டேட்ஸ்மேன் (டில்லி) மே 6, 1947. இரண்டாவது ''பொதுத் தேர்தல் மத்தியக்கமிட்டி பரிசீலனை''-ஜனசக்தி வெளியீடு-''முஸ்லீம் லீகை ஏன் ஆதரிக்கிறோம்'' - பக்கம் 14, ''கம்யூனிஸ்ட்கட்சி - ஸ்தாபன அமைப்பு;'' அஜாய்கோஷ்-''நியூ ஏஜ்''—1954 ஏப்ரல்-ஜூன் இதழ்களில் எழுதிய ''ஜனநாயக இயக்கமும் -தொழிலாளிவர்க்கத் தலைமையும்'' என்ற கட்டுரைகள்! எந்தக் கம்யூனிஸ்டாவது கட்டுரைகளைச் சந்தேகப்பட்டால் இந்தப் புத்தகங்களையெல்லாம் படித்துப் பார்த்துவிட்டு நம்மீது பாயத் தயாராகட்டும்!

—கூடலரசன்.

—7-ம் பக்கத் தொடர்ச்சி—

தஞ்சைப் பெருநிலம் சரபோஜி மன்னன் காலத்தில் கலையிலும், கல்வியிலும் எழுச்சி பெற்று விளங்கியது. அந்தக் காலத்தில் ஆடற்கலைக்கு அளவுகடந்தமதிப்புக் கொடுக்கப்பட்டது. ஆடற் பயிற்சி பெற்றவர்களெல்லாம் சரபோஜியின் அவையிலே அரங்கேற்றம் செய்யப்பட்டார்கள். பரதநாட்டியத்தில் மிகுந்த பற்றுக் கொண்டிருந்த சரபோஜி அது போன்ற அரங்கேற்ற விழாக்களை வெறும் பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளாக மட்டும் கருதவில்லை. தன்னுடைய ஆட்சிக் காலத்தில் தமிழகத்தில் கலை வளர்ந்து வருகிறது என்பதற்கு ராஜ்யத்தில் நடைபெறும் கலை நிகழ்ச்சிகளெல்லாம் ஆதாரங்கள் எனக் கருதிப் பெருமைப் பட்டுக்கொண்டான். கலைஞானம் மிகுந்த சரபோஜி மன்னன் பரத நாட்டியத்திற்காக இறைத்த செல்வம் அளவிடமுடியாதது. இன்று காணமுடியாத நாட்டிய வகைகள் சரபோஜியின் காலத்தில் நிறைந்திருந்தன. தெற்குச் சீமையில்-பாண்டிய நாட்டில் ஆடத் தெரிந்தவர்களெல்லாம் சரபோஜியின் அவையிலே ஆடுவதற்கு 'தவம்' கிடந்தார்கள். மன்னனோடு பேசுவதற்குத் தகுதியைப் பெற்றவர்களுக்குப் பொன்னும் பொருளும் இறைத்து ஆடுவதற்குச் சந்தர்ப்பம் வாங்கப்படாத பாடுபட்டார்கள்.

வில்லாய் வளைந்து, கொடியாய்த் துவண்டு வீடுகளில், கல்யாணப் பந்தல்களில் ஆடி 'அற்புதம்! அற்புதம்!' என்று புகழப்பட்டவர்களில் எத்தனையோ பேரழகிகள் சரபோஜியின் அவையிலே ஆடமுடியாமல் வியர்த்து விறுவிறுத்து வீடு திரும்பியிருக்கிறார்கள். உடையழகால், உருவத்தின் எழிலால், கடையிதழின் இளஞ்சிரிப்பால் சரபோஜி மன்னனிடம் பதக்கம் பெற முயன்றவர்கள் அந்த எண்ணங்கள் கனவாகித் தத்தளித்திருக்கிறார்கள். ஆட்டத்தில் குறை கண்டால் எடுத்துக் கூறி அபிநயம் பிடித்துக் கூட்டும் கலைச் செல்வன் சரபோஜி.

கலை ஞானத்தால், கனிந்த உள்ளத்தால் தென்னாட்டில் பெரும் புகழைச்சம்பாதித்திருந்த சரபோஜி மன்னன் ஒருமுறை பாண்டி நாட்டுக்கு வந்தான். சின்ன வயதில் அவர் சிறையிருந்த காலத்தில் விடுவிப்பதற்குப் பெரும்பாடுபட்ட ஸ்வாட்ஸ் பாதிரிக்கு சிவகங்கைக்கு அருகில் ஒரு நினைவுச் சின்னம் எழுப்ப நெடுநாட்களாகத் திட்டமிட்டிருந்த ஆசையை நிறைவேற்ற சரபோஜி சிவகங்கைக்கு வந்தான். பொதுமக்களின் சார்பிலும், நாட்டுக்கோட்டைச்செட்டியார்களின் சார்பிலும் சரபோஜிக்கு மகத்தான வரவேற்பு ஒன்று நடத்தப்பட்டது.

தொண்டித் துறைமுகத்திற்கும் மதுரை நகரத்திற்கும் அப்போது சாலைகள் அமைக்கப்படவில்லை. ஏற்றுமதி இறக்குமதிப் பொருள்கள்கூட நொடிப்பாதைகளில்தான் போகவேண்டும். அந்தப் பாதையின் ஓரத்தில் நான்கு பாதைகள் ஒன்றுசேரும் சந்திப்பில் திருமாஞ்சோலை என்னும் ஊருக்குப் பக்கத்தில் சரபோஜி மன்னன் அழகானதொரு மாளிகையை எழுப்பினான். ஸ்வாடஸ்துரையின் நினைவாக சலவைக்கல்லால் மாதாகோயில் எழுப்பும்போது சிவகங்கை நகருக்குத் தான் அடிக்கடி வர நேரிடும் என்று எண்ணியே அந்த மாளிகையை அங்கே எழுப்பினான். இன்று அந்த மாளிகை இடிந்து கிடக்கிறது. தொண்டியிலிருந்து மதுரை போகும் பெருஞ்சாலையில் 'ஒற்றைப்பூவரசு' என்று சொன்னால் மோட்டார்க்காரர்கள் அந்த மாளிகைக்கு அருகில்இறக்கிவிடுகிறார்கள். நாலுபாதைகள் ஒன்றுசேரும் அந்தச் சந்திப்பில் சரபோஜியின் காலத்தில் ஒரு பூவரசுமரம் இருந்திருக்க வேண்டும். இல்லாவிட்டால், மரமே இல்லாத அந்தப் பொட்டலுக்கு '**ஒற்றைப்பூவரசு**' என்று பெயர் வரக் காரணமில்லை, அந்த மாளிகையில்தான் சரபோஜி மன்னனுக்கு விருந்து வைக்கப்பட்டது. கானாடுகாத்தானைச் சேர்ந்த குமரப்பர் விருந்துக்கு அமைக்கப்பட்டிருந்த வரவேற்பாளர்களில முக்கியஸ்தராக இருந்தார்.

விருந்து முடிந்தது. வந்திருந்தோரை அறிமுகம் செய்து வைக்கும் கட்டம் வந்தது. அப்போது மாளிகை வாசலில் ஒரு கோச் வண்டி வந்து நின்றது.

(தொடரும்)

தென்னகமெங்கும்

ஜூலை 25ல் முதல் சென்னை
வெலிங்டன் - அசோக் - மஹாராணியில்
நடைபெறுகிறது.
ARUNA

திங்கள் - சொல்லாராய்ச்சி!

கிராமியத் தமிழ்

நாட்டுப்புறங்களில் புதையுண்டு கிடக்கும் தமிழ்ச் சொற்களை இக்கட்டுரை நினைவுக்குக் கொண்டு வருகிறது.

'தண்டமிழ் மொழிக்கு முதல் இலக்கணமாக விளங்கும் தொல்காப்பியம்; புறநானூறு, அகநானூறு போன்ற சங்க இலக்கியங்கள்; தமிழ் மாதின் இனிய உயிர்நிலையாம் திருக்குறள்; முதலிய நூல்களிலும் ஒருசில வடமொழிச் சொற்கள் வருகின்றன' என்று மொழிநூல் வல்லார்கள் குறிக்கின்றனர். சமணர்களும் - புத்தர்களும் தமிழ்நாட்டில் புகுந்த பிறகு ஏராளமான வடசொற்கள் தமிழ் மொழிஆட்சியில் கலந்துவிட்டன. மணிப்பிரவாள நடையென்ற ஒரு தனி நடையை அவர்கள் ஏற்படுத்திக் கொண்டார்கள். பின்னர் தோன்றிய சமயப் பெரியார்களையும்— மற்ற அறிஞர்களையும் 'மணிப்பிரவாளம்' ஆட்கொண்டுவிட்டதென்றே கூறலாம்.

ஒல்காப் பெரும்புகழ் தொல்காப்பியத்திற்கு உரை வரைந்தோர் பலர். அவர்களில் 'சேனாவரையர்' என்ற பெரியார் ஒருவரைத் தவிர, மற்ற – இளம்பூரணர் - நச்சினார்க்கினியர் - பேராசிரியர், கல்லாடர் முதலியவர்கள் தமிழ்நெறிப்படியே உரை வகுத்தனர். சேனாவரையருக்குப் பின்வந்த சிவஞான முனிவரும் ஆரியத்தை அடிப்படையாகக் கொண்டே, தொல்காப்பியப் பாயிர விருத்தி முதலிய நூல்களை யாத்துள்ளனர்.

சங்ககாலம் முதற்கொண்டு தற்காலம் வரையிலும் ஆரியத்தின் அடிப்படையில் தமிழ் மொழிக்குத் தொண்டு செய்தவர்கள் — செய்கின்றவர்களிருந்திருக்கின்றனர் — இருக்கின்றார்கள். அதனாற்றான் தமிழ்மொழி வளர்ந்தது என்பது அறியாதார் கூற்று. பண்டுதொட்டே தமிழ் மகன் ஆரியத்திற்கு இணக்கந் தந்து வந்திருக்கிறான். இன்று அதைத் தகர்த்தெறிய அறப்புரட்சி நடத்துகின்றான். அவன் செய்யும் அறப்போர் வாகை சூடுங்காலம் அண்மையிலேயே உள்ளது. வந்தவர்கட்கெல்லாம் வாழ வழிவகுத்துத் தந்த வண்டமிழ் வீரன் 'வினர்கள் சிலரால் வீழ்ச்சியடைந்த காலமும் ஒன்று உண்டு. அவ்வீழ்ச்சியே இன்றைய எழுச்சிக்குக் காரணமாக அமைந்துள்ளது. எனினும் சில தமிழ்ச் சொற்களும்-சுவடிகளும் மறைக்கப்பட்டும், அழிக்கப்பட்டும் விட்டன என்பதை யாருமறிவர்.

உரையாசிரியர்களில் சிலர் தமிழின் பெருமையைக் காத்தவாறு நாட்டுப்புற மக்களும் காத்து வந்திருக்கின்றனர். அதற்குரிய சான்றுகளைக்கண்கூடாகக் காணமுடியும். மருவிய வழக்கிலோ அல்லது திரிந்த வழக்காகவோ பேசிவரும் நாட்டுப்புறத்தார் இல்லையெனின் ஆயிரக்கணக்கான தமிழ்ச் சொற்கள் அழிந்து போயிருக்கும். இவ்வுண்மையை அறிஞர் பெருமக்கள் நன்கு உணர்வர். இனிச் சில சொற்களைக் காண்போம்.

திங்கள்:— இச்சொல்லைப் பல பொருளொரு சொல்லென்பர் இலக்கண நூலோர். ஏழு நாட்களைக் கொண்ட வாரத்தில் 'திங்கள்' என்ற ஒரு நாளுண்டு. ஏழு நாட் தொகைக்குத் 'திங்கள்' என்ற பெயருமுண்டு. முப்பது அல்லது முப்பத்தொன்று- இரண்டு நாட்களைக் குறிக்கும் தொகைப் பெயர், 'திங்கள்' என்ற சொல்லால் வழங்கப்படுகிறது. வானிலே வட்டமிடும் வெண்ணிலாவையும் 'திங்கள்' என்றே சொல்வர்.

வானில் உலவும் மதியிடமிருந்தே இச்சொல் பிறந்திருக்க வேண்டும். பூமி ஞாயிற்றைச் சுற்றுகிறது. வெண்ணிலா-பூமி ஞாயிறு இரண்டையும் சுற்றுகிறது. நிலா, முறையே இவற்றைச் சுற்றி வர முப்பது நாட்கள் (ஏறக்குறைய) ஆகின்றன. அது கருதியே—அத்தொகைக்குத் 'திங்கள்' என்று பெயரிட்டனர், நிலாவிற்கும் அப்பெயரே முதன் முதலில் வைத்ததால்!

'கோள்கள் ஒவ்வொன்றும் இடம்விட்டு இடம் பெயரும்' என்ற தத்துவத்தைத் தமிழன் அன்றே கண்டிருந்தான். தெய்வப் புலமைத் திருவள்ளுவருங்கூட இக்கருத்தைக் குறிப்பால் விளக்குகின்றார். ஒரு பெண்ணினுடைய முகத்தை வருணிக்கும் பொழுது 'மீன்கள் இடம் விட்டு இடம் பெயரும்' என்ற தத்துவத்தை விளக்குகின்றார்.

'மதியும் மடந்தை
முகனு மறியாப்
பதியிற் கலங்கிய மீன்,

என்பது அக்குறள். எனவே, சுமார் ஈராயிரம் ஆண்டுகட்கு முன்னமேயே தமிழன் வான நூற்கலையில் மிகுந்த தேர்ச்சி பெற்றிருந்திருக்கிறான் என்பதைச் சங்க நூற்கள் வாயிலாகவும், சங்க மருவிய நூலாகிய சிலப்பதிகாரங்கொண்டும் நன்கு உணரலாம்.

விண்ணிலே தவழும் வெண்ணிலவையும், மீன்களையும் ஆராய்ந்து, நாழிகை-நாள்-வாரம் திங்கள்-ஆண்டு- இருது முதலியவற்றைக் கணித்தனர் தமிழர். இன்றும், நாட்டுப்புறங்களிலே உள்ளவர், மீன்களைக்கொண்டு நேரத்தைக் கணக்கிடுகின்றனர். அது தற்கால மணியளவைக்கு மிகவும் பொருந்தியதாகவே உள்ளது. ஆனல் இன்று வான நூற் கலை தமிழரிடத்து இருக்கின்றதா என்றால் பதிலிறுப்போம் இல்லையென்று. இதைத் தமிழர்களிடத்தினின்றும்அழித்தவர்கள் ஆரியர்களே என்பது முற்றிலும் பொருந்தும். 'சோதிடம்' என்ற ஒன்றை தமிழ் நாட்டில் புகுத்தி-வானநூற் கலையை அழித்தனர் வடவர். தமிழ் மொழியிலிருந்த நூற்களையும் தீயிலிட்டும், நீரிலிட்டும் ஒழித்து விட்டனர். இத்தனைக்கும் காரணம் ஜோதிஷமென்றே கருதலாம்.

உலகிலேயே தமிழர்கள்தான் வானநூற் பயிற்சியில் சிறந்திருந்தார்கள், - மற்ற மக்களெல்லாம் விலங்கொடு விலங்காய் காட்டிடை வதிந்தபோது - நம் தமிழ் மக்கள் இயந்திரங்கள்மூலம் வானமண்டலத்தை ஆராய்ந்தனர் என்ற பொற்கருத்தை- ஆராய்ச்சிமூலம் தெளிவுபடுத்தியவர் ஒரு அறிஞர் பெருமகன். அவருக்குத் தமிழகம் என்ன கைமாறு செய்யவல்லது!

கி. பி. 19-ம் நூற்றுண்டில், கோவை மாவட்டம், பல்லடம் வட்டம் சோமனூர்ப் பதியில் தோன்றிய அப்பெரியாரின் பெயர் சாமிகண்ணுப் பிள்ளை என்பதாகும். இடைக்காலத்திற்றேன்றிய கல்வெட்டுக்களில் பொய்க் கல்வெட்டுக்களும் உண்டு என்பதைக் கண்டறிந்தவரும் இவ்வறிஞரேயாகும்.

புறநானூறு-அகநானூறு முதலிய நூல்களைக்கொண்டும், சிறப்பாகச் சிலப்பதிகாரத்தை வைத்துக்கொண்டும் ஆராய்ச்சிசெய்து ஒரு பெரும் நூல் எழுதியுள்ளார். அந்நூலில், வானநூல் கலை பற்றிய தமிழர்கள் தம் அறிவை வெகுவாகப் பாராட்டுகின்றார் என்பதை ஆசிரியர்கள்மூலம் கேட்டுத் தெரிந்துகொள்ளலாம். 'திங்கள்' என்ற ஒரு சொல்லுக்காக இவ்வளவும் எழுதவேண்டி வந்தது.

'திங்கள்' என்ற சொல்லுக்குப் பதிலாகச் சிலர் 'மாதம்' என்ற சொல்லைப் பயன்படுத்துகின்றனர். 'மாதம்' என்பது 'மாஸம்' என்ற வடமொழிச் சொற்றிரிபு. 'மாதம்' என்ற சொல்லே பெரும்பாலும் வழக்கிலிருந்து வருகின்றது.

கொங்குநாட்டு வேளாளர் குடியுள், கவுண்டர்கள் இல்லத்தில், 'எழுதிங்கட்சீர்' என்ற ஒரு சடங்கு நிகழ்த்தப்படுகிறது. ஒரு ஆணுக்குத் திருமணம் முடிந்து, அக்காதலரிருவருக்கும் பிறக்கும் இரண்டாவது குழந்தைக்கு 'ஏழு திங்கள்' கடந்த பிறகு இச்சடங்கு நிகழ்கிறது. இன்னும் பல நிகழ்ச்சிகளும் அச்சடங்கில் நிகழ்கின்றன. அவை இவண் வேண்டா. அச்சடங்கு 'எழுதிங்கட்சீர்' என்ற பெயராலேயே இன்றும் வழக்கிலிருந்து வருகிறது.

'ஐயிரண்டு திங்களாய் அங்கமெலாம் நொந்து பெற்று' என்று பட்டினத்தடிகளும், இச்சொல்லைத் தம் இலக்கியத்தில் ஆண்டுள்ளார். எனவே, 'திங்கள்' என்ற திருமொழியிருக்க 'மாஸம்' என்ற மந்தியை விழைந்து ஏற்பது அறிவுடைமையாகுமா? எண்ணித் துணிக.

—க. சி. இராசியண்ணன்

எங்கும் கிடைக்கும்.

வெண்பாப் போட்டி

௨௨. 'தாய்' எனத் தொடங்கி 'சேய்' என முடித்தல்.

தாய்என் றழைப்பதுவால் தண்முத்தம் ஈவதுவால்
ஓய்வுக்கு என்னே டுறங்குவதால்—வாய்வைத்துக்
கொங்கை சுவைத்துக் குளிர்முகத்தைக் காட்டுவதால்
செங்கண்ணுர் கொண் கனுமோர் சேய் !

—வள்ளி, நாமக்கல்.

தாயாக வேண்டித் தவஞ்செய்து நீராடிக்
கோயிலெலாம் சுற்றுவார்க்குச் சேயில்லை—சேயிழையே !
பூவுலகில் ஓர்பிள்ளை போதும் எனவிருந்தோம்
தேவையோ இத்தனை சேய் !

—கண்ணன், அகரப்பேட்டை.

தாயானேன் வஞ்சகனல் தக்கமணம் எய்திடுமுன்
நாயென்று தூற்றிற்றே நாடெல்லாம்—ஆயினுந்தன்
பொல்லாக் குறுஞ்சிரிப்பால் போக்கினனே என்வருத்தம்
செல்லக் கிளியான சேய் !

—செந்தாமரை, ஆத்துப்பொள்ளாச்சி.

தாய்மைத் தமிழகமே! ஏன்பெற்ருய்? வாழ்வதற்கு
சேய்நாடு சென்ருலும் சுட்டுத்தான்—மாய்க்கிருர்;
நித்தம் பூ டிக்கின்ருர், நீகொடுத்த ஆட்சியிலே
சித்திரம்போல் வாழ்வதாஉன் சேய் ?

—அன்பரசன், தேவதானப்பட்டி.

தாய்மொழியாம் நல்ல தமிழிருக்க என்கொலோ
வாய்நுழையா இந்தி வடக்கிருந்து—பாய்வது
கொன்று குவித்தாலும் கூட்டமாய்ப் போருக்குச்
சென்றிடுவோம் வீட்டிற்கோர் சேய்.

—க. வி. வரதராசன், சென்னை.

தாயை மறந்ததனல் தன்வழியே சென்றதனல்
ஏயும் நலமேதும் இல்லாமல்—தியவர்
கைபட்டு நாளுங் கலங்கித் தவித்திடுதே
செய்வ தறியாமற் சேய்.

—லூர்துசாமி, விழுப்புரம்.

தாயங்கே வாடிச் சருகாய்க் கிடந்திடப்
போயங்கே பார்த்துப் புலம்பியே—ஓயாமல்
கத்தித் துடிக்குதடா காங்கிரசு ஆட்சியிலே
தித்திக்கும் தேன்மழலைச் சேய்.

—பழனிராதா, கும்பகோணம்.

தாய்நாட்டை விட்டுத் தமிழனின்று தென்னிலங்கைப்
பேயின்கீழ் கண்ணீர் பெருக்குவது—மாய்வதெப்போ
எங்கள் தமிழ்த்தாயே ஏற்றெடுத்துச் சற்றேபார்
சிங்களத்தில் துன்புறுமுன் சேய்.

—மாயன், தேனி.

தாய்நாடு காத்திடவே தன்னுயிரைத் தந்திடுவான்;
பேய்வடவர் இந்திதனைப் பேணுன்காண்—தூய்மைமிகு
சொந்தத் திருத்தமிழைச் சொத்தெனவே போற்றிடுவான்
செந்தமிழன் பெற்றெடுத்த சேய்.

—பூ. ச. கந்தசாமி, தாம்பரம்.

தாய்த்தமிழே தண்புனலே தார்வேந்தர் போற்றிமகிழ்
தூய்மையினுய் தோகை யுனை மறவேன்—பேய்க்குநிகர்
இந்தி இடரிழைத்தால்; எஞ்ஞான்றும் செங்கீரைச்
சிந்தியுனைக் காப்பேனுன் சேய்.

—பி. மு. அபிபுல்லா, போடியம்பதி.

தாய்நாட்டை விட்டுத் தனித்துப் பிறநாட்டில்
ஓய்வின்றி நாளும் உழைத்துழைத்துத்—தேய்வதனல்
கந்தலொடு கஞ்சிக்கும் கண்கலங்கி வாடுதந்தோ
செந்தமிழாள் பெற்றெடுத்த சேய்.

சி. பி. சாமி, திருப்பத்தூர்.

தாய்காட்டும் அன்பு தரணிதனில் இன்னதெனப்
போய்க்கேட்டு நின்ருல் புரிந்திடுமோ ?—தாய்மை
உளங்கொண்ட பெண்மை உயர்வடைய நாளும்
வளங்காணும் சேயேநற் சேய்.

—பசுமலைவீர. முருகேசன், மதுரை.

தாயின் குணம்பாடித் தாரணியி லெங்கெங்கும்
கோயி லெடுப்போம் எனக்கூவி—பேயினும்
ஈண்டடிமை செய்கின்ருன் ஈன்றெடுத்த பெண்குலத்தை
ஆண்மகனுய் ஆகிவிட்ட சேய்.

—கண்ணரசு, கோவை.

தாய்மை குமுறுதடி ! தாலாட்டுப் பாடிடவே
வாயும் துடித்து வருத்துதடி !—ஆயிரமாய்
முத்தம் சொரியமனம் முந்துதடி ! மூச்சற்றுச்
சித்திரமாய் ஏன்கிடந்தான் சேய் !

—சிற்பி, ஆத்துப்பொள்ளாச்சி.

தாயார் துடிக்கின்ருள்; தாதி தவிக்கின்ருள்;
தியார் எவர்செய்த தீவினையோ ?—ஐயோ !
விற கொடிக்க வென்று வெளியேறி, எங்கோ
சிறகடித்துச் சென்றதாம் சேய்.

—மா. சுப்பையா, நாரைக்கிணறு.

எங்கும் விற்பனையாகிறது!

முல்லை

(ஜூலை இதழ்)

விலை அணு எட்டு.

ராஜபார்லி பிஸ்கட்ஸ்

குழந்தைகளுக்கு சிறந்த ஆகாரம்

PRO: A. சங்குபிள்ளை, 15, திண்டுக்கல்ரோடு, மதுரை.



ஆசிரியர் : கண்ணதாசன். அச்சிடுபவர், வெளியிடுபவர்: சுப. அருணசலம், ஏ. எல். எஸ். அச்சகம், 2/127, மவுண்ட்ரோடு, சென்னை-6. தமிழ்நாடு